பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 15 வெள்ளிக்கிழமை(30-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:184

# நெகிழ்வுப் போக்கைப் பின்பற்ற புலிகளைக் கோருகிறார் பிரதமர்

## நிபந்தனை விதிப்பது இலகு; ஆனால் நிறைவேற்றுவது கஷ்டம் என்கின்றார்

கொழும்பு,மே30

**"தற்போதைய சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு விடுதலைப் புலிகள் மேலும் சற்று நெகிழ்வுப்போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும்.**

**"நிபந்தனைகள் விதிப்பது இலகு. ஆனால், நிறைவேற்றுவது மிகக் கஷ்டம்" -இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

ஆசிய விடுதலைவாதிகள், ஜனநாயகவாதிகள் கவுன்ஸிலின் அங்குரார்ப்பண நிகழ்ச்சி நேற்று கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு உரையாற்றியபோதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசு - புலிகள் இடையேயான சமாதானப்பேச்சுக்கள் கடந்த ஒரு மாதகாலமாக இடைநிறுத்தப்பட்டுள்ள பின்னணியில் அவ்விடயம் குறித்துப் பிரதமர் பகிரங்கமாகக்

(16ஆம் பக்கம் பார்க்க)



புத்தூர் நவக்கிரியில் புதிதாக இராணுவ முகாம் நிறுவ எடுக்கப்பட்டு வரும் முயற்சியைக் கண்டித்து நேற்று நவக்கிரிச் சந்தியில் இடம்பெற்ற மறியல் போராட்டத்தின்போது...

## திருமலையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இருவர் மீது துப்பாக்கிச் சூடு! வாள் வெட்டு!!

திருகோணமலை,மே30

இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கும் வாள் வெட்டுக்கும் இலக்காகினர். படுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இவர்களின் நிலைமை மோசமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணிக்கு திருகோணமலை உவர்மலை மத்திய வீதியில் இடம்பெற்றது.

மத்திய வீதியில் சயிக்கிளில் வந்த இவர்கள் மீது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணிமனைக்கு அருகில் வைத்து மறைந்திருந்த இருவர் துப்பாக்கியால் சுட்டும் வாளால் வெட்டியும் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அவ்வழியால் சென்ற பாதசாரிகள் அருகிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கு இதனை அறிவித்துள்ளனர். காயமடைந்த இருவரும் செஞ்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நவக்கிரி சந்தி வீதியை வழிமறித்து மறியற்போர்!

### அங்கு படைமுகாம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

வலி.கிழக்கு,மே30

புத்தூர், நிலாவரைப் பகுதியில் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் புதிய படைமுகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியை உடன் நிறுத்துமாறுகேட்டு அப்பிரதேச மக்கள் நேற்று மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

வலி.கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டம் காலை 9.30 மணிமுதல் இடம்பெற்றது.

புத்தூர் - சுன்னாகம் வீதியை வழிமறித்து நவக்கிரிச் சந்தியில் இந்தப் போராட்டம் இடம்பெற்றதால் அந்த வீதி ஊடான போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்த ஊரெழு படைமுகாம் அதிகாரி பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

மறியல் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்கேசிவாஜிலிங்கம், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் ஆகியோர் சகிதம் அந்தப்படை அதிகாரி முகாம் அமைக்கவிருக்கும் கட்டடப் பகுதிக்குச் சென்றார்.

மேலிடத்தின் உத்தரவின் பேரிலேயே அங்கு முகாம் அமைக்கும் பணிகளைத் தாம் மேற்கொண்டு வருவதாக அவர் அங்கு தெரிவித்தார்.

மறியல் போராட்டத்தின் முடிவில், பிரதமருக்கு விலாசமிட்ட மகஜரை பொது அமைப்புப் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் எம்கே.சிவாஜிலிங்

(16ஆம் பக்கம் பார்க்க)

### லொறியில் இருந்து தவறிவீழ்ந்த

## கலவை இயந்திரத்தின் கீழ் சிக்கிய இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,மே30

லொறியில் இருந்து தவறி விழுந்ததாகக்கூறப்படும் 'கொங்கிறீற்' கலவை இயந்திரத்தின் அடியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மானிப்பாய் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நீர்வேலியைச் சேர்ந்த சந்திரன் ஸ்ரீகரன் (வயது 17) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

'கொங்கிறீட்' கலவை இயந்திரம் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு லொறிமூலம் எடுத்துச்செல்லப்பட்டது. கலவை இயந்திரம் லொறியுடன் பிணைக்கப்படவில்லை. மேற்படி இளைஞர் கலவை இயந்திரத்துடன்

(16ஆம் பக்கம் பார்க்க)

### புளியங்குளத்தில் கிடுகு ஏற்றி வந்த

## லொறியின் மேலே இருந்தவர் தூக்கி வீசப்பட்டு மரணம்!

வவுனியா,மே30

ஏ-9 கண்டி வீதியல் புளியங்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் ஒருவர் உயிரிழந்தார்; நால்வர் காயமடைந்தனர்.

கிருஷ்ணபிள்ளை சங்கர் என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

கிடுகு ஏற்றிவந்த லொறி ஒன்றின் மேற்பகுதியில் அமர்ந்தவாறு ஐவர் பயணம் செய்தனர் என்றும், அவ்வேளை எதிரேவந்த மற்றொரு வாகனத்துக்கு வழி விட்டுக்கொடுப்பதற்காக

(16ஆம் பக்கம் பார்க்க)

### உத்தரவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு

## அதிகாரிகள் நிறைவேற்றாவிடின் ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்

### ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,மே30

"அரசாங்கத்தின் எந்தவோர் அதிகாரிக்கும் உத்தரவிடுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்குள்ளது. உத்தரவை அவர்கள் நிறைவேற்றாதவிடத்து உரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்வார்" என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரிம்பீரிஸ சொன்னார்.

அமிர்தலிங்கம் நேற்று? [illegible] தலைவருக்கு ஜனாதிபதி கடிதம் மூலம் விடுத்துள்ள உத்தரவு தொடர்பாகச் சபைத் தலைவர் ஊடகங்களுக்குத்

(16ஆம் பக்கம் பார்க்க)




தேசிய சேமிப்பு வங்கி வழங்கும்

வீடமைப்புக் கடன்

- 12%, 13%, 14% கவர்ச்சியான வருடாந்த வட்டி.
- 30 ஆண்டுகள் நீடித்த கடன் மீள் செலுத்தும் காலம்.
- கடனை திரும்பச் செலுத்துவதற்கான ஆகக்கூடிய வயது 65 ஆகும்.
- மறைமுக நிபந்தனைகளோ கட்டணங்களோ இல்லை.
- தலைமையகத்தில், 4 நாட்களில் கடன்களைப் பெறும் "துரித சேவை" வசதி

எனது வீடு கட்டும் கனவு நனவாகியது

NSB உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

மேலதிக தகவல்கள்: 074-552459 அல்லது அண்மையிலுள்ள கிளை முகாமையாளரிடம் பெறலாம்.

PHOENIX 0804

# தமிழ் - முஸ்லிம் உறவு குறித்து புலிகளுடன் பேச 30 பேர் குழு

## மட்டு. மாவட்ட உபகுழுக் கூட்டத்தில் முடிவு

கொக்கட்டிச்சோலை,மே30

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ - முஸ்லிம் மக்கள் உறவை மீண்டும் கட்டியெழுப்ப 30 முஸ்லிம் பிரமுகர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் - புலிகள் உபகுழுக் கூட்டம் நேற்றுக் காலை வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் பின்னர் பிரதியமைச்சர் பஷீர சேகுதாவூத் ஊடகவியலாளர்களிடம் பேசுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஏறாவூர், ஓட்டமாவடி, காத்தான்குடி ஆகிய பிரதேசங்களில் இருந்து தலா 10 முஸ்லிம் பிரமுகர்கள் இக்குழுவில் அங்கம் வகிப்பர். இவர்கள் அடிக்கடி கரடியனாறில் விடுதலைப் புலிகளைச்சந்தித்து தமிழ் - முஸ்லிம் உறவு தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிப்பர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களின் காணிகள் யாவும் மீணடும் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

- இவ்வாறு அவர் சொன்னார்.

இந்தச் சந்திப்பில் மட்டு.அம்பாறை மாவட்ட புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஸ் மற்றும் ஜோசப்பராஜசிங்கம் எம்.பி. உட்பட ஆறுபிரதிநிதிகளும் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் தலைமையில் ஆறு பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். மட்டு. அரச அதிபர் இமோனகுருசாமியும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள தமிழர்களின் காணிகளிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறி காணிகளை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்கும் விடயம் குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மாவட்டக் குழுக்கூட்டம் எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி மீண்டும் கூடும். அதற்கு முன்னர் ஜூன் 8 ஆம் திகதி கொக்கட்டிச்சோலையில் ஒரு சந்திப்பு இடம்பெறும்.

# புதிது புதிதாகப் படைமுகாம்களை நிறுவுவதைத் தடுத்து நிறுத்துங்கள்!

## பிரதமரிடம் பொது அமைப்புகள் கோரிக்கை

வலி.கிழக்கு,மே30

குடாநாட்டில் படையினர் புதிது புதிதாக முகாம்களை நிறுவுவதை தடுத்து நிறுத்துங்கள்.

வலிகாமம் கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கண்டவாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டிருக்கிறது.

புத்தூர் நவக்கிரியில் படையினர் புதிதாக முகாம் ஒன்றை அமைக்க முயற்சித்து வருவதைக் கண்டித்து நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்ட மகஜர் வருமாறு:-

வலி.கிழக்குப்பிரதேசத்தில் உள்ள சகல பொது அமைப்புக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வலிகாமம் கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினராகிய நாம் கீழ் வரும் விடயத்தினை தங்களின் கவனத்திற்கு தருகின்றோம்.

எமது பிரதேசத்தின் நிலாவரைப் பகுதியில் இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றினை அமைக்கும் முயறசியில் கடந்த ஒரு வாரமாக ஈடுபட்டு வருகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டபடி இராணுவ நிலைகளை அகற்றுவதற்கு மாறாக புதிய புதிய நிலைகளை அமைத்து வருகின்றனர். இந்த நடவடிக்கையானது ஒப்பந்த மீறல் மட்டுமல்ல அதறகும் மேலாக ஒரு மனித உரிமை மீறலுமாகும்.

தற்போது இராணுவ முகாம் அமைக்கும் பகுதியைச் சூழவுள்ள இடங்களில் மிக முக்கியமான ஆலயங்கள், பாரிய அளவில் நீர் வழங்கும் நிலாவரை வற்றாத கிணறு, விவசாய உற்பத்தியினை ஊக்குவிக்கும் கமநலசேவை நிலையம், பால் அபிவிருத்திச்சபைக்கு என ஒதுக்கப்பட்ட பிரதேசம், யாழ்மாவட்டத்துக்கான உரக் களஞ்சியமும் இங்குதான் அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் மிக நெருக்கமாக வாழ்வதோடு வலிகாமத்தின் நுழைவாசலாக ஏனைய பிரதேசங்களில இருந்து வரும் மக்களின் போக்குவரத்து பிரதான வீதியும் அமைந்த முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இப்புதிய முகாம் அமைக்கப்படுகின்றது. இதனால், எமது மக்கள் பாரிய பல பர்ச்சினைகளை சந்திக்கவேண்டி வரும என அச்சமடைந்துள்ளனர்.

எனவே, மேற்படி விடயங்களை தங்கள் சிந்தனையில் எடுத்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மக்களின் வாழ்விடங்களில் உள்ள இராணுவ நிலைகளை அகற்றி, மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்தித் தரும்படி கேட்பதோடு, இதே போன்று புதிய புதிய இராணுவ நிலைகளை அமைக்கும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறும் நயவெண்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

### போராளியும் நாட்டுப்பற்றாளரும் உயிரிழப்பு!

கிளிநொச்சி,மே30

முல்லைத்தீவு மாவட்டத்தில் மன்னாகண்டல் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் இயக்கப்போராளி ஒருவரும் நாட்டுப்பற்றாளரும் கிணற்றில் மூழ்கி மரணமாகினர்.

கட்டன் தூயநம்பி (பாலசுப்பிரமணியம்கமலநாதன் - ஒட்டுசுட்டான்) என்ற போராளியும் கிளிநொச்சியைச் சேர்ந்த தங்கையா சசீந்திரன் என்ற நாட்டுப்பற்றாளரும் சாவடைந்ததாகத் 'புலிகளின் குரல்' தெரிவித்தது. (ஐ-3-12)

### ம.மாகாண முதலமைச்சர் நேற்று காலமானார்!

கொழும்பு,மே30

மத்திய மாகாண முதலமைச்சர் டபிள்யூ.பி.பீ. திஸநாயக்க நேற்று பிற்பகல் காலமானார். இவர் சுகவீனம் காரணமாக சில தினங்கள் பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

இறக்கும் போது இவருக்கு வயது 76.

1977 ஆம் ஆண்டிலிருந்து மத்திய மாகாணசபை முதலமைச்சராகும் வரை அவர் கம்பளைத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

1978 ஆம் ஆண்டு மாவட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இவருக்கு மூன்று புதல்விகளும் ஒரு புதல்வனும் இருக்கின்றனர்.

### தவறவிட்ட திறப்புக் கோர்வை

யாழ்ப்பாணம்,மே30

கலட்டிச்சந்தியில் நேற்று மாலை 7 மணியளவில் பல திறப்புக்கள் அடங்கிய கோர்வை ஒன்று பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்கள் இருவரால் கண்டெடுக்கப்பட்டு 'உதயன்' பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திறப்புக்கோர்வையைத் தவற விட்டவர் தகுந்த ஆதாரங்களைக்காட்டி 'உதயன்' அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ஐ-3)

**தேர்தலில் போட்டியிடாதோர் நியமனம்:**

# உயர் நீதிமன்ற தீர்ப்புக் கிடைத்ததும் தேர்தல் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு,மே30

தேர்தல் நியமனப்பத்திரம் வழங்கிய வேட்பாளர்களைக்கொண்டே மாகாணசபை உறுப்பினர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, தேர்தல் திணைக்களத்துக்குக் கிடைத்தபின்னரே அதுதொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் முழுவிவரம் தேர்தல் திணைக்களத்துக்குக் கிடைக்கவில்லை எனவும், தீர்ப்பின் பிரதி ஒன்றை வழங்குமாறு சட்டமா அதிபரைக் கோரவிருப்பதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

தீர்ப்பின் முழுவிவரம் கிடைத்ததும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ஏதாவது சிக்கல் இருக்குமேயானால் மட்டுமே சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும் எனவும தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, இத்தீர்ப்பை அடுத்து மேல்மாகாண, தென்மாகாண, வடமேல்மாகாண முதலமைச்சர்களினது பதவிகளின் சட்டபூர்வ தன்மை குறித்து கேள்வி எழுந்துள்ளது.

இம்மூன்று மாகாண சபைகளிலும் முதலமைச்சர்களாகப் பதவிவகிக்கும ரெஜிநோல்ட். குரே, எஸ்.ஜி.சிறிசேன, போட்டி பிரேமலால் திஸாநாயக்க ஆகிய மூவரினதும் பெயர்கள் கடந்த மாகாணசபைத் தேர்தல் நியமனப்பத்திரங்களில் இடம்பெறவில்லை. தேர்தலின் பின்னரும், முதலமைச்சர் பதவி வெற்றிடங்களின் பின்னருமே இவர்கள் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். (ஐ)

# தெற்கில் மூடப்பட்ட பாடசாலைகள் திங்கள் முதல் மீண்டும் திறக்கப்படும்

## தொற்று நோய் பரவும் அபாயம் நீங்கியது

கொழும்பு,மே30

வெள்ளம், மண்சரிவு காரணமாக மூடப்பட்ட பாடசாலைகள் திங்கள் முதல் மீண்டும் திறக்கப்படும் என்று அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

வெள்ளம், மண்சரிவால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:-

முற்றாக அடித்துச் செல்லப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் அருகில் உள்ள வேறுபாடசாலைகளுக்கு மாற்றப்படுவர். சீருடைகளை இழந்த மாணவ, மாணவிகள் வேறு உடைகளை அணிந்து பாடசாலை செல்ல அனுமதிக்கப்படுவர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொற்று நோய் பரவும் அபாயம் நீங்கியுள்ளது. அநேகமாக குடிதண்ணீர் கிணறுகள் சுத்தப்படுத்தப்பட்டு விட்டன. தெனியாய - மாத்தறை, தெனியாய - இறக்குவானை வீதிகள் தவிர சேதமுற்ற அனைத்து வீதிகளும் திருத்தப்பட்டு விட்டன. தெனியாயவுக்கான போக்குவரத்து இன்னும் பத்து தினங்களில் ஆரம்பிக்கப்பட்டுவிடும்.

- இவ்வாறு அவர் சொன்னார்.







புத்தூர் நவக்கிரி எல்லாளன் வீதியில் சேதமடைந்த நிலையில் காணப்படும் கால்நடை வைத்திய நிலையக் கட்டடத்தை முதலபடத்தில் காணலாம். இந்தக் கட்டடத்திலேயே படையினர் புதிதாக முகாம் நிறுவ ஏற்பாடு செய்து வருகின்றனர். அங்கு முகாம் அமைக்கப்படுவதை எதிர்த்து நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் படை அதிகாரிகளும், அரச அதிகாரிகளும் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு உரையாடுவதை இரண்டாவது படத்தில் காண்கிறீர்கள்.

முகாம் அமைப்பதை நிறுத்தக் கோரி பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பப்பட்ட மகஜரை வலி.கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் சார்பில த.கிருஷ்ணராசா கோப்பாய் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசனிடம் கையளிப்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: பொ.இராஜேஸ்வரன்).

# நுவரேலியாவில் பெரும் தீ விபத்து! இரண்டு வீடுகள், மூன்று கடைகள் நாசம்

கொழும்பு,மே30

நேற்று அதிகாலை நுவரேலியாவில ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு வீடுகளும், மூன்று கடைகளும் முற்றாகச சேதமடைந்தன.

நுவரேலியா - கண்டி வீதியில் பொலீஸ் நிலையத்திற்கு எதிரே அமைந்துள்ள கடைத்தொகுதியில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அதிகாலை ஐந்து மணியளவில் தீ பிடித்துக்கொண்டபோது பொலீஸ் நிலையத்தில் கடமையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரே அதனைக் கண்டுள்ளார். உடனே பொலீஸார் அங்கு விரைந்து சென்று வீடுகளிலும் கடைகளிலும் இருந்தவர்களைத் தட்டி எழுப்பித் தீயை அணைத்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. நுவரேலியாப் போலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மாணவியை வாகனத்தில் கடத்த முயற்சி! ஆத்திரமுற்ற தொழிலாளர்கள் தீ வைப்பு

## மஸ்கெலியா பகுதி தோட்டத்தில் சம்பவம்

பாடசாலை மாணவி ஒருவரை வாகனத்தில் கடத்திச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் ஒரு சம்பவம் மஸ்கெலியா பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரவுன்ஸ்விக் தோட்டத்தில் நடைபெற்றது. இச்சம்பவத்தால் ஆத்திரமுற்ற தோட்டத்தொழிலாளர்கள் 'பிக்அப்' வாகனம் ஒன்றையும் அதில பயணம் செய்தோர் தங்கியிருந்த தற்காலிக முகாம்களையும் தீ வைதது கொளுத்தி இருக்கின்றனர்.

பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான 'பிக்அப்' சாரதி, மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மேற்படி தோட்டத்தில் மினி மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணித்து வரும் கொந்தராத்துக்காரர்களில் சிலரே அந்த 'பிக்அப்' வாகனத்தில் பயணம் செய்திருக்கின்றனர்.

தீ வைப்பு சம்பவம் குறித்து அறிந்த மஸ்கெலிய பொலீஸார் அங்கு விரைந்து அமைதியை நிலை நாட்டி இருக்கின்றனர். (ஐ)

# குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு திட்டம் வரைய பிரதமர் யோசனை

நாட்டில் பெருகி வரும் குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு ஒரு திட்டத்தை வரைவதற்கான அமைச்சரவைப்பத்திரம் ஒன்றை பிரதமர் ரணில விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்திருக்கிறார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும் என அதில் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உள்துறை அமைச்சு, நீதியமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள், பொலீஸ்மா அதிபர், ஜனாதிபதியின் ஒரு பிரதிநிதி ஆகியோர் உட்பட எழுவரைக் கொண்டதாக அக்குழு அமையும். (ஐ)

# பிரிட்டிஷ் பிரதமர் பிளயர் நேற்று ஈராக்குக்கு விஜயம்

பஸ்ரா(ஈராக்),மே30

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நேற்று ஈராக்குக்கு விஜயம் செய்தார். வளைகுடாப் போரில் பங்குபற்றிய தமது துருப்பினருக்கு நன்றி செலுத்துவதற்காகவே அவர் ஈராக்குக்கு விஜயம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் இருந்து 40 நிமிட நேரப் பயணத்தில் அவர் ஈராக்கின் தெற்கே உள்ள அதன் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவை உள்ளூர் நேரப்படி காலை 7.50 மணியளவில் வந்தடைந்தார். சி.130 ரக விமானத்தில் விமானிகள் அறையில் இருந்து அவர் பயணம் செய்தே பஸ்ராவுக்கு வந்து சேர்ந்தார்.



பிளேயர் குவைத்தில் வந்திறங்கிய போது

ஈராக்கின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து சதாம் ஹுசைனை அகற்றிய பின்னர் அந்த நாட்டுக்கு விஜயம் செய்த முதல் வெளிநாட்டுப் பிரதமர் பிளயராவார்.

பஸ்ரா நகரில் உள்ள சதாம் மாளிகைக்கு வெளியே இருக்கும் தளத்தில் 400 பிரிட்டிஷ் துருப்பினர்கள் மத்தியில் பிளயர் உரையாற்றினார். ஈராக்கில் மொத்தம் 20 ஆயிரம் பிரிட்டிஷ் துருப்பினர் தற்சமயம் தங்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கிருந்து உம் கஸ்ர் நகருககு செல்லும் வழியில் ஈராக்கிய பாடசாலை ஒன்றில் ஈராக்கியச் சிறுவர்களைச் சந்தித்துப் பேசினார். அதற்கு முன்பாக ஈராக்கில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் துருப்பினரின் முதலாவது பிரிவுத தளபதியான ஜெனரல் பீற்றர் வோல் என்பவரைச் சந்தித்துப் பேசினார். போர் முடிந்த இறுதி ஒரு மாத காலத்தில் ஈராக்கிய மக்களின் நிலை எப்படி இருக்கிறது என்று பிளயர் அவரிடம் கேட்டறிந்து கொண்டார்.

6 மணித்தியாலங்கள் மட்டுமே ஈராக்கில் தங்கியிருந்த பிளயர் உடனடியாகவே நாடு திரும்பினார். (ம)

# பெரு நாட்டில் வேலைநிறுத்தம் வன்முறையாக மாறுகின்றது!

லீமா,மே30

பெரு நாட்டில் தொடர்ந்து வரும் தொழிலாளர் வேலை நிறுத்தம் வன்முறைகளை நோக்கித் திரும்பியுள்ளது. பல இடங்களில் பொலீஸாருக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கைகலப்புக்கள் இடம்பெற்றுள்ளன.


உலக அரங்கில்

தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அதிபர் ஒரு மாதத்துக்கு நாட்டில் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தி உள்ளனர்.

சம்பள உயர்வு கோரியும் வரி உயர்வைக் குறைக்கக் கோரியும் பலதரப்பட்ட ஊழியர்களும் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆசிரியர்களும் ஏனைய பொது ஊழியர்களும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமை தாங்கி வருகின்றனர்.

தலைநகர் லீமா உட்பட பல இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் கைகலப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்துவதற்கு பொலீஸார் அனுமதி மறுத்து வருகின்றனர். இதனால் ஆத்திரமடையும் எதிர்ப்பாளர்கள் அரச சொத்துக்களுக்கு கடும் சேதங்களை விளைவித்து வருகின்றனர்.

அதேசமயம் - தலைநகர் லீமாவில் நிலநடுக்கம் தாக்கியுள்ளது. 5.1 புள்ளியாக ரிச்டர் அளவுகோலில் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் எந்த சேதங்களும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)




எட்மன் ஹில்லாரி எவரெஸ்டில் ஏறி சாதனை புரிந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டிய பொன்விழாக் கொண்டாட்டங்கள் நேபாளத்தில் நேற்று நடைபெற்றன. அதில் எட்மன் ஹில்லாரி (நடுவில்) கலந்துகொண்டார்.

## ஈராக்கில் அமெரிக்க சிப்பாய் பலி!

ஈராக்கில் நேற்று வியாழக்கிழமை அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளையகம் தெரிவித்துள்ளது.

ஈராக்குக்கான பிரதான விநியோகப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்த போது வித்கெல்ட் என்ற அந்தச் சிப்பாய் சுட்டுக் கொல்லப்பட்டதாக மத்திய கட்டளையகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் அவர் இறந்து விட்டதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த இடத்தில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படலாம். (ம)

# எவரெஸ்டில் ஏறி 50 ஆண்டுகள் நேபாளத்தில் கொண்டாட்டம்

காத்மண்டு,மே30

உலகின் மிக உயரமான மலை உச்சியான எவரெஸ்டில் முதன் முதலில் ஏறிச் சாதனை புரிந்ததின் 50ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்று நேபாளம் முழுவதும் பெரும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்தக் கொண்டாட்டங்களில் எவரெஸ்டில் முதலில் ஏறிச் சாதனை புரிந்தவரான சேர் எட்மன்ட் ஹில்லாறி கலந்து கொண்டார். இவருடன் காலஞ்சென்ற டென்சிங் நொர்கே என்பவரும் எவரெஸ்டை எட்டி சாதனை புரிந்திருந்தார். அவர்கள் இந்தச் சாதனையைப் புரிந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதைத் கொண்டாடும் விதத்திலேயே நேபாளம் முழுவதும் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஊர்வலங்களும் நடத்தப்படுகின்றன.

நேபாள அரசர் ஞானேந்திராவும் இந்தக் கொண்டாட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டார். நேற்றிரவு எல்லா மலையேற்றக் குழுவினருக்கும் மன்னர் இரவு விருந்து அளித்தார். எட்மன் ஹிலாரியும் அவரது மகனான பீற்றர் ஹிலாரியும் இந்தக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். ஒரு குழுவினர் எவரெஸ்ட் மலையின் பனிபடர்ந்த முகடுகளில் தமது கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த ஏற்பாடுகளின் போதே நேற்றுமுன்தினம் ஹெலி ஒன்று விபத்துக்குள்ளாகி மூவர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



இந்திய பிரதமர் வாஜ்பாய் ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஒரு வார கால சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவர் பிரான்ஸ் சென்ற போது அங்கு அதிபர் ஜக்ஸ்ரோவுடன் எடுத்துக் கொண்ட படம்.

## இரண்டாவது தடவையாக ஒபஸான்ஜோ அதிபராகப் பதவியேற்பு

நைஜீரியாவின் ஜனநாயக ரீதியான முதலாவது அதிபராக ஒலுசெகன் ஒபஸான்ஜோ நேற்றுப் பதவி யேற்றுக்கொண்டார். அவரது இரண்டாவது அதிபர் பதவிக் காலம் இதுவாகும். 1960இல் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் அங்கு ஜனநாயக ஆட்சிமாற்றம் சுமுகமாக இடம்பெற்றுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற சர்ச்சைக்குரிய தேர்தலின் பின்னர் ஒபஸான்ஜோ அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுதந்திரம் அடைந்த பின்னர் நைஜீரியா அடிக்கடி இராணுவ ஆட்சியின் கீழேயே இருந்து வந்துள்ளது. பின்னர் அது ஜனநாயக ஆட்சிக்கு மாறும் போது பெரும் வன்முறைகள் இடம்பெறுவது வழமை. இம்முறை அவ்வாறு இல்லாமல் ஆட்சி மாற்றம் சுமுகமாக இடம்பெற்றது.

# அல்ஜீரியாவில் 3ஆவது நிலநடுக்கம்

அல்ஜீரியஸ்,மே30

அல்ஜீரியாவில் மீண்டும் நிலநடுக்கம் தாக்கியுள்ளது. தலைநகர் அல்ஜீரியா, அதன் நகரின் கிழக்குப் பகுதி என்பவற்றை நேற்று வியாழனன்று அதிகாலை மீண்டும் நிலநடுக்கம் தாக்கியது. எனினும், பெரும் சேதங்கள் ஏற்படவில்லை.

சில கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. சிலருக்கு காயங்கள் ஏற்பட்டன. உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.15 மணிக்கு மூன்றாவது தடவையாகவும் நிலநடுக்கம் தாக்கியது. 5.8 புள்ளியாக அது ரிச்டர் அளவுகோலில் பதிவானது.

கடந்த வாரத்தில் அல்ஜீரியாவைத் தாக்கிய பெரும் நிலநடுக்கத்தால் 2ஆயிரத்து 251 பேர் உயிரிழந்தனர் என்றும் 10ஆயிரத்து 243 பேர் காயமடைந்தனர் என்றும் இறுதியாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். அது தவிர மேலும் ஆயிரக்கணக்கானவர்களைப் பற்றிச் சரியான தகவல்கள் தெரியவில்லை. இந்த அனர்த்தம் நிகழந்த ஒரு வாரத்தின் பின் நேற்றும் நேற்றுமுன்தினமும் மீண்டும் இருதடவைகள் நிலநடுக்கம் அல்ஜீரியாவைத் தாக்கியுள்ளது. (ம)



அல்ஜீரியாவில் தொடர்ந்து நிலநடுக்கங்கள் தாக்கிவருகின்றன. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது உடைமைகளை இழந்து தவிக்கின்றனர். அவ்வாறு உடைமைகளை இழந்த மூதாட்டி ஒருவர் நிவாரணமாக வழங்கப்பட்ட புடைவைகளில் நல்லதைத் தேர்ந்தெடுக்கிறார்.

# ஹமாஸ்"டன் போர் நிறுத்த ஒப்பந்தம் பலஸ்தீனப் பிரதமர் அபாஸ் அறிவிப்பு

ஜெருசலேம்,மே30

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை முற்றாக நிறுத்துவது குறித்து தீவிரவாதக் குழுவான ஹமாஸ் அமைப்புடன் அடுத்த வாரம் அளவில் தான் பேச உள்ளதாக பலஸ்தீனப் பிரதமர் அபாஸ் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.




அமெரிக்கப் பின்னணியுடன் தயாரிக்கப்பட்டுள்ள மத்திய கிழக்குக்கான பிரதான வரைபடம் முன்னகர்வதற்கு ஹமாஸ் அமைப்புடனான போர்நிறுத்த ஒப்பந்தம் மிக முக்கியமானது. இதனால் இந்த விடயத்தில் தாமே நேரடியாக இறங்கப் போவதாகப் பிரதமர் அபாஸ் தெரிவித்தார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், பலஸ்தீனப் பிரதமர் அபாஸ் மற்றும் அமெரிக்க அதிபர் புஷ் ஆகியோருக்கு இடையிலான முத்தரப்பு சந்திப்பு அடுத்த மாதம் 4ஆம் திகதி ஜோர்டானில் நடைபெறவுள்ளது. அதற்குள் ஹமாஸ் அமைப்புடன் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்துப் பேசிவிட அபாஸ் முயன்றுவருகின்றார்.

"என்னுடைய திட்டப்படி அடுத்த வாரம் நான் ஹமாஸ இயக்கத்துடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுவேன்" - என்றார் அபாஸ். ஆனால், இஸ்ரேல் விதிக்கும் எந்த நிபந்தனைக்குப் பணிந்தும் தாம் அப்படி ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மாட்டோம் என ஹமாஸ் இயக்க முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ம)

## ஆசிய கிராண்ட் பிறீ மெய்வன்மை:

# சுசந்திகா, ரொஹான் முதலிடம்! இலங்கைக்கு 2 தங்கம், 4 வெள்ளி!!

ஆசிய 'கிராண்ட் பிறீ' மெய்வன்மைப் போட்டிகளின் முதலாவது கட்டத்தில், இலங்கை மெய்வல்லுநர்களான சுசந்திகா ஜயசிங்க பெண்களுக்கான 100 மீற்றர் போட்டியிலும், ரொஹான் பிரதீப் குமார ஆண்களுக்கான 400 மீற்றர் போட்டியிலும் தங்கப் பதக்கங்களைப் பெற்றனர். 4 வெள்ளிப் பதக்கங்களும் இலங்கைக்குக் கிடைத்தன.

இப்போட்டிகள் நேற்றுமுன்தினம் இந்தியாவின் ஹைதராபாத் நகரிலுள்ள பாலயோகி அரங்கில் நடைபெற்றன.

பெண்களுக்கான 100 மீற்றர் போட்டியில் ஆசிய சம்பியனான இலங்கை வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க 11.30 செக்கன்களில் ஓடி புதிய சாதனையுடன் முதலிடம் பெற்றார்.

சுசந்திகாவின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. எனினும், இறுதி 50 மீற்றர் தூரத்தை மின்னலாகக் கடந்தார் அவர்.

உஸ்பெகிஸ்தான் வீராங்கனை குபீவா குஸெல் இரண்டாமிடத்தைப் பெற்றார்.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் இலங்கை மீண்டும் ஆதிக்கம் செலுத்தியது. இலங்கையர்களான ரொஹான் பிரதீப் குமார 45.95 செக்கன்களில் ஓடி தங்கப்பதக்கத்தையும், சுகத் திலகரட்ன 56.28 செக்கன்களில் ஓடி வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றனர். இந்தியாவின் அனில் குமார் ரோஹில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

### தர்ஷாவுக்கு அதிர்ச்சி

இதேவேளை, பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் இலங்கை வீராங்கனை தமயந்தி தர்ஷா இரண்டாமிடத்தையே பெற்றார்.

ஆசிய விளையாட்டு விழா சம்பியனான தர்ஷாவை கஸகஸ்தான் வீராங்கனை போத்ரிஸ்ட் கயா ஸ்வெட்லானா தோற்கடித்து முதலிடம் பெற்றார். ஸ்வெட்லானா 52.59 செக்கன்



ஆசிய கிராண்ட் பிறீ தடகளப் போட்டியில் பெண்களுக்கான 100 மீற்றர் பிரிவில் வெற்றிபெற்ற இலங்கை வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் தனக்கு வெற்றி தேடி தந்த ஷூவுக்கு முத்தம் கொடுக்கிறார்.

களில் ஓடி முடித்தார்.

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து ஸ்வெட்லானா முன்னிலை வகித்தார். அவரை நெருங்கியவாறு தர்ஷா ஓடினார். மத்திய பகுதியில் தர்ஷா பெரும் முயற்சி செய்த போதிலும் முதலிடம் கிட்டவில்லை. அவர் 52.78 செக்கன்களில் ஓடி முடித்தார்.

போட்டியின் பின் தர்ஷா கூறுகையில் "முதுகில் ஏற்பட்ட உபாதையே பின்னடைவுக்குக் காரணம்" என்றார்.

பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் இலங்கை வீராங்கனை ஸ்ரீயானி குலவன்ஸ வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றார்.

அவர் 13.32 செக்கன்களில் ஓடி முடித்தார். தாய்லாந்தின் ட்ரேசியா ரொபர்ட் 13.22 செக்கனில் ஓடி தங்கப் பதக்கத்தைப் பெற்றார். இந்தியாவின சோமா பிஸ்பாஸ் மூன்றாமிடம் பெற்றார்.

இலங்கை மெய்வல்லுநர்களில் எதிர்பாராதவிதமாக இன்ப அதிர்ச்சி தந்தவர் இந்திக குமார டி சில்வா. ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 14.37 செக்கன்களில் ஓடி அவர் இரண்டாமிடம் பெற்றார்.

சீன போட்டியாளர்களின் விலகலை யடுத்து இறுதி நேரத்தில் போட்டியில் சேர்க்கப்பட்ட மூவரில் இந்திகவும் ஒருவர். ஹைதராபாத்தில் பெற்ற பெறுபேற்றின் மூலம் அடுத்த கட்டப் போட்டிகளுக்கும் அவர் சேர்க்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போட்டிகளில் பங்குபற்றிய 8 இலங்கை மெய்வல்லுநர்களில் மஞ்சுள புஷ்பகுமார, எம்.எஸ்.சிப்ரத் (800 மீற்றர்) ஆகியோர் மாத்திரமே பதக்கம் பெறத் தவறினர். இவ்விருவரும் இறுதி நேரத்தில் அணியில் சேர்க்கப்பட்டவர்களாவர்.

இப்போட்டிகளில் மிக வேகமான நபராக கஸகீஸ்தான் வீரர் சேர்னோவல் கென்னடி விளங்கினார். ஆண்களுக்கான 100 மீற்றர் போட்டியில் அவர் 10.42 செக்கன்களில் ஓடி முதலிடம் பெற்றார். தாய்லாந்தைச் சேர்ந்த விட்டிசாய் சுவர்ணோ பிரதீப் 10.45 செக்கனில் ஓடி இரண்டாமிடத்தையும் எக்காச்சி ஜன்தானா 10.54 செக்கன்களில் ஓடி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

### இந்தியாவுக்கு ஏமாற்றம்

இப்போட்டிகளை நடத்திய நாடான இந்தியாவின் சார்பில் சுமார் 40 மெய்வல்லுநர்கள் பங்குபற்றினர். எனினும அவர்களில் எவரும் தங்கப் பதக்கத்தைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னணி வீராங்கனைகளான அஞ்சு ஜோர்ஜ் (நீளம் பாய்தல்), கே.பீனா மோல் (400 மீற்றர், 800 மீற்றர்) ஆகியோர் இப்போட்டிகளிலிருந்து விலகியமை இந்தியாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது.

இரண்டாவது ஆசிய கிராண்ட் பிறீ மெய்வன்மை விழாவின் இரண்டாவது கட்டப் போட்டிகள் நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள மெய்வல்லுநர்கள் நாளை கொழும்பை வந்தடையவுள்ளனர். (ஒ)



இந்திய கிரிக்கெட் அணியின் இளம் நட்சத்திரம் டினேஸ் மொங்கியா திருமணம் செய்துகொண்டுள்ளார். அந்த வரவேற்பு வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

## தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியை குளூஸ்னர் நாசப்படுத்தி விடுவார்!

### அணித்தலைவர் ஸ்மித் குற்றச்சாட்டு

தென்னாபிரிக்காவின் சகலதுறை கிரிக்கெட் வீரர் லான்ஸ் குளூஸ்னர், அணியை சீரழித்துவிடுவார் என்று அவ்வணியின் தற்போதைய தலைவர் கிரேம் ஸ்மித் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் தென்னாபிரிக்க அணியில் லான்ஸ் குளூஸ்னர் தேர்வு செய்யப்படவில்லை. இதற்கான காரணங்களை கிரேம் ஸ்மித்திடம் கேட்டபோது, "ஓர் அணியில் பங்குபெறும் வீரராக குளூஸ்னர் பல தடைகளை ஏற்படுத்துவார். தென்னாபிரிக்க கிரிக்கெட்டில் மாற்றங்கள் நடைபெற்று வருகிறது.

"நேர்மையாக சொல்ல வேண்டுமென்றால், லான்ஸ் சில சமயம் அபாரமான வீரர் சில சமயம் அணியை சீரழித்துவிடுவார்.

"ஒரு கிரிக்கெட் வீரராக அவரது திறமை நன்றாக உள்ளது. ஆனால் இளைஞர்களை அவர் சீரழித்து விடுவார். அவரது இந்த நடத்தை, இளம் வீரர்களை [illegible] என்கிறார் ஸ்மித்.

ஸ்மித்தின் இந்தக் கருத்திற்கு அதிர்ச்சி வெளியிட்டுள்ள குளூஸ்னர், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைதேர்வுக் குழுத்தலைவர் ஓமர் ஹென்றியிடம் தான் ஒதுக்கப்பட்டதற்கு காரணம் கேட்டுள்ளார். ஓமர் ஹென்றி புது வீரர்களை சேர்ப்பதற்காக குளூஸ்னர் விலக்கப்பட்டுள்ளார் என்று கூறியிருக்கிறார்.

தென்னாபிரிக்காவின் 'ஸ்டார்' என்ற தினசரிக்கு இது குறித்து பேட்டி அளித்த குளூஸ்னர் 'இது ஒருமிகப் பெரிய நகைச்சுவை, இங்கே என்ன நடக்கிறது என்பது யாருக்கேனும் தெரியுமா?

தற்போதைய அணித்தலைவர் என்னுடன் 2போட்டிகளில் மட்டுமே விளையாடியிருக்கிறார். அவர் என்னைப் பற்றி கூறும் இக்கருத்துக்கள் நகைப்புக்கிடமானவை. என்னை நீக்குவதற்கு காரணமான பிரச்சினை எதுவாயினும், அதிகாரத்தில் உள்ளவர்கள் எவரும் அப்பிரச்சினையைத் தீர்க்க எந்தவித முயற்சிகளையும் எடுக்கவில்லை என்பது உறுத்தலானது" இவ்வாறு கூறியுள்ளார். (ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

வடமராட்சி,மே30

புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த மெய்வன்மை போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.சண்முகராசா தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிகளில் பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் கிருபாகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-173)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 3.00 மணிக்கு கழக மைதானத்தில் புலோலி இளைஞர் வி.கழகமும், இளைய நிலா வி.கழகமும் மோதுகின்றன. (ஒ-5)

★ ★ ★

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் 16 வயதுக்குட்பட்டோருக்கான 'அஸ்ரா' வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள விவரம் வருமாறு:-

★ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி. (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானம்)

★ சென்ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி (சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானம்).

★ ★ ★

சாவகச்சேரி,மே30

மட்டுவில் கமலாசனி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்து கொள்வார். (ஒ-31)

### மெய்வல்லுநர் சங்க போட்டிப் பரீட்சை

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் தொழில்நுட்ப அலுவலர் தரம்4 இற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும்15ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தமது பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் 347,கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்போர்ட் ஸ்பொட்டில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்

# விளையாட்டு

## இலங்கை அணியுடனான போட்டியில்

# 4 ஓட்டங்களை நடுவர் மறுத்துவிட்டார்! பாகிஸ்தான் அணி ஐ.சி.சியிடம் புகார்!!

'அல்-பலாஹ்' கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியுடனான போட்டியில் தமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நான்கு ஓட்டங்களை ஆஸ்திரேலிய நடுவர் டெரில் ஹார்பர் நிராகரித்துவிட்டார்.'

- இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஐ.சி.சியிடம் புகார் செய்துள்ளது.

பாகிஸ்தான் நாளிதழொன்று நேற்று முன்தினம் இத்தகவலை வெளியிட்டது.

'அல்-பலாஹ்' கிண்ணத் தொடரில் பாக். அணி தனது மூன்றாவது போட்டியில் இலங்கையுடன் மோதியது. கடந்த 18ஆம் திகதி தம்புள்ளையில் இப்போட்டி நடைபெற்றது. இதில் 12 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் பாக். வீரர் தௌபீக் உமர் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது அவர் அடித்த பந்தொன்றை இலங்கைக் களத்தடுப்பாளர் ஒருவர் தடுத்தார். அவர் மறுமுனையில் இருந்த மொஹமட் ஹாபிஸை 'ரன் அவுட்' செய்வதற்காக விக்கெட்டை நோக்கி எறிந்தார்.

எனினும், பந்து ஹாபிஸின் துடுப்பில் மோதி எல்லைக் கோட்டைக் கடந்தது.

அப்போது தௌபீக் உமரை ஓட்டமொன்றைப் பெறத் தூண்டிய போதிலும் பின்னர் அவரைத் தடுத்தார்.

ஐ.சி.சி. விதிகளின்படி விக்கெட்டை நோக்கி எறியப்பட்ட பந்து எல்லைக் கோட்டை நோக்கிச் செல்லும்போது ஓட்டங்களைப் பெறுவது துடுப்பாட்ட வீரரின் விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால், பந்து எல்லைக் கோட்டைக் கடந்து விட்டால் துடுப்பாட்ட வீரருக்கு 4 ஓட்டங்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆனால், நடுவர் டெரில் ஹார்பர், 4 ஓட்டங்களுக்கான சமிக்ஞையைக் காட்டவில்லை. மாறாக பந்தை திசை மாற்றிவிட்டு ஓட்டமொன்றைப் பெற முயன்றமைக்காக மொஹமட் ஹாபிஸை எச்சரித்தார்.

இப்போட்டி தொடர்பாக ஐ.சி.சி. மத்தியஸ்தர் குண்டப்பா விஸ்வநாத் திடம் சமர்ப்பித்த உத்தியோகபூர்வ அறிக்கையில்,

"துடுப்பாட்ட வீரருக்கு ஓட்டங்களை வழங்காமை மூலம் கிரிக்கெட விதிமுறைகளை டெரில் ஹார்பர் உதாசீனப்படுத்தியுள்ளார். இச்சம்பவம் சிறிய தொன்றாயினும் இதை ஐ.சி.சி. கவனத்திற் கொள்ளவேண்டும். நடுவர்கள் தெரிந்து கொண்டே கிரிக்கெட் விதிகளை மீறுவதற்கு இது ஓர் உதாரணமாகும்" என்று பாகிஸ்தான் அணி தெரிவித்துள்ளது. (ஒ)

## ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் மொரோக்கோ பயணம் ரத்து

சிட்னி,மே30

வட ஆபிரிக்க நாடான மொரோக்கோவில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி மேற்கொள்ளவிருந்த சுற்றுப் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மொரோக்கோவில் வெளிநாட்டவரை இலக்கு வைத்து சமீபத்தில் வெடி குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால், தமது பாதுகாப்புக் குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் அச்சம் வெளியிட்டனர். இதனையடுத்தே கிரிக்கெட் சுற்றுப்பயணம் ரத்துச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, தொடர்ந்து ஆட்டங்களில் பங்கேற்று வருவதால் ஆஸ்திரேலிய வீரர்கள் சோர்வடைந்து வருவதாக 'சிட்னி டெய்லி ரெலிகிராப்' பத்திரிகை கடந்த புதன்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே சுற்றுப்பயணம் ரத்தானதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாதம வரை ஆஸ்திரேலிய அணிக்கு தொடர்ந்து போட்டிகள் இருந்தன. இதனால் செப்ரெம்பர் மாதம் தமக்கு ஓய்வு அவசியம் என ஆஸ்திரேலிய அணியினர் வலியுறுத்தியதாகவும் -

இதனையடுத்தே, பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி மொரோக்கோ சுற்றுப்பயணம் ரத்துச் செய்யப்பட்டதாகவும் - கூறப்படுகின்றது.

உதயன்

## இறுதி நேரத்திலும் இழுத்தடிப்பு வேலையா?

வடக்கு - கிழக்குக்கென இடைக்கால நிர்வாகம் வழங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

அதற்குப் பதிலாக வடக்கு - கிழக்கு அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஒரு மாற்றுக் கட்டமைப்பையே பிரதமர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

ஆனால், அந்தக் கட்டமைப்பில் புலிகளின் பிரதிநிதித்துவம், பங்கு - பணி ஆகியவை குறித்துத் திட்டவட்டமான ஏற்பாடுகள், வரையறைகள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

பிரதமரின் பதில் யோசனைகள் தொடர்பாக முற்கொண்டு கசிந்த தகவல்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன.

தெற்கில் தனக்குள்ள அரசியல் நெருக்கடிகள், அழுத்தங்கள், மட்டுப்பாடுகள் காரணமாகவும் அரசமைப்புக்குள்ளேயே செயற்பட வேண்டும் என்று தனக்குத்தானே அவர் வகுத்துக்கொண்ட வரையறை காரணமாகவும் இத்தகைய பதில் யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முடிவு செய்திருக்கலாம்.

ஆனால், புலிகளின் எதிர்பார்ப்பைச் சற்றேனும் நிறைவு செய்வதற்கு இடமளிக்காத இத்தகைய பதில்யோசனை, அமைதி முயற்சிகளில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்ற கேள்வி, அச்சம் தரும் விடையை - சந்தேகத்தை - கிளப்புவதாக இருப்பது தான் வேதனைக்குரியது.

புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கையில் முக்கியமான இரண்டு விடயங்கள் அமைந்திருந்தன. அவை :

★ யுத்தத்தால் பேரழிவுகளைச் சந்தித்துள்ள வடக்கு - கிழக்கில் அவசர, மனிதாபிமான மற்றும் புனரமைப்புப் பணிகளைத் தடையின்றி, விரைந்து மேற்கொள்வதற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அவசியம்.

★ அந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் முக்கிய - அதிக - பங்களிப்பு புலிகளுக்கு வழங்கப்படவேண்டும்.

இந்த - இரண்டு அடிப்படை விடயங்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டே பிரதமரின் பதில் யோசனைகள் தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

எனினும், புலிகள் வற்புறுத்தியுள்ள விடயங்களை எழுத்தில் உறுதியளிக்காமல், அதற்கு இடமளிக்கும் விதத்தில் நழுவல் வழுவலாக பதில் யோசனைகளைச் சமர்ப்பித்துவிட்டு, புலிகள் கேட்டவற்றை செயலில் நிறைவேற்றுவதாக வாய்மூல உறுதிமொழியை வழங்கலாம் என்ற ஓர் ஒளிவு மறைவுத் திட்டத்தை அரசுத்தரப்புத் தயாரித்து வைத்திருந்தது என்று கருதப்படுகிறது.

பிரதமரின் பதில் யோசனைகளை எழுத்து வடிவத்தில் புலிகளுக்குச் சமர்ப்பிப்பதற்கு மேலதிகமாக, நோர்வே அனுசரணையாளர் ஒருவரையும் நேரடியாக அனுப்பி, புலிகளுக்கு விளக்கமளிக்கும் முயற்சியில் விடாப்பிடியான பிரயத்தனம் காட்டப்பட்டது இதற்காகத்தான்.

ஆனால், எழுத்தில் குறிப்பிடப்படாதவற்றை - நீதியான முறையில் உறுதியளிக்கப்படாதவற்றை - நம்பி மோசம் போகப் புலிகள் தயாராக இல்லை.

இப்படி எழுத்தில் இல்லாமல் - வாய்மூலம் - வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நம்பித்தான் காலங்காலமாக ஈழத்தமிழினம் ஏமாற்றப்பட்டது என்ற கசப்பான அனுபவம் தமிழ்த் தலைவர்களுக்கு உண்டு.

1987இல் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி வரை இத்தகைய வாய்மூல உறுதிமொழிகளைத் தந்துதான் தமிழர்களை ஏமாற்றினார்கள் என்பது தெரிந்த விடயம்.

அதனால்தான் "எழுத்தில் இருப்பதை அனுப்புங்கள் பரிசீலிக்கிறோம். வசனங்களுக்கு இடையில் - எழுத்தில் குறிப்பிடப்படாமல் - இருக்கக்கூடிய - வாய்மூலம் தெரிவிக்கப்படுகின்ற - விடயங்கள் குறித்துப் பிறகு பரிசீலிக்கலாம்" என்று ஒரே போடாகப் போட்டவர் புலிகள். அதன்மூலம் பிரதமரின் யோசனையோடு, நோர்வே அனுசரணையாளர் ஒருவரும் நேரில் வந்து வாய்மூலம் விடயங்களை வெட்டிப் பிளக்க எடுத்த முயற்சியை ஒட்ட நறுக்கினர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு இன்னமும் எட்டு நாள்கள்தான் உள்ளன.

இந்தச் சமயத்திலும் - இத்தகைய பிரச்சினைகளுக்கு - திட்டவட்டமான முடிவுகளை முன்வைத்து, இழுபறிகளைத் தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் காலத்தை இழுத்தடித்துச் செல்வது பயன்தரும் விளைவுகளைத் தராது என்பது மட்டும் நிச்சயம்.

கடும் காற்றினால் உபகரணங்கள் சேதம்

## வங்கிகளில் கடன் பெற்றுத்தரும்படி மாதகல் மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே30

அண்மையில் வீசிய கடும்காற்றினால் எமது கடற்றொழில் உபகரணங்கள் அழிந்துபோய்விட்டன. எனவே, மீண்டும் தொழிலை ஆரம்பிப்பதற்கு வங்கிகளில் இலகு கடன்களைப் பெற்றுத் தரவேண்டும்.

- இவ்வாறு வடமாகாணக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணத்திடம் மாதகல் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் வீசிய கடும்காற்றுக் காரணமாக எமக்குப் பெருமளவு சொத்து இழப்பீடு ஏற்பட்டுள்ளது. எமது வள்ளங்கள், வலைகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் உட்பட 40 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களுக்கு சேதமேற்பட்டுள்ளது. இந்தவகையில் நாம் தற்போது எமது தொழில் உபகரணங்கள் அனைத்தையும் இழந்து தொழிலைத் தொடர முடியாதநிலையில் உள்ளோம்.

மீண்டும் தொழிலைத் தொடங்குவதற்குப் போதிய நிதிவளமும் எம்மிடம் இல்லை. எனவே, வங்கிகளில் எமக்கு இலகு கடன்களைப் பெற்றுத்தரவேண்டும் - இவ்வாறு மாதகல் மீனவர்கள் கோரியுள்ளனர். இக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சமாசத் தலைவர் மீனவர்களுக்கு உறுதியளித்துள்ளார். (ஒ-8)

## நாட்டு நடப்பு

### அப்புவின் கடை[illegible] ஆசை

ஐயா!

எல்லாமாய்ப் பெற்றெடுத்தேன் ஏழு பிள்ளை
இதில் முதல் மூன்றுமே ஆண் மக்வாகிப் போச்சு
நல்ல மாதினை முடித்து நாற்பதாண்டு
நல்லவளும் கைலாயம் போயே சேர்ந்தாள்
எல்லாமே உயிரோடு இருந்துமென்ன
எட்டியொன்று எனைப் பார்த்து ஏழு மாதமாச்சு
நல்லதுதான் பிள்ளைகளைப் பெற்றாலென்று
நம்பிநீர் நடப்பதினி மோசமாச்சு
பல்லாண்டு காலம் இந்த மண்ணின் மீது
பொல்லூண்டி முடமாக வாழ்ந்து விட்டேன்
வில்லூண்டி சென்றடைந்து விறகடுக்கி
வேண்டிவந்த நஞ்சினையே குடித்து விட்டு
மெல்லவே விறகின்மேல் படுத்த வண்ணம்
மெதுவாக என்னுயிரைப் போக்கப் போறேன்
நல்லதோர் "பிண விளக்கம்" எனக்கு வேண்டாம்
நற்கவியாய் விகடகவி இதனைப் பாடும்.

வாழ்க்கையில் வெறுப்புற்ற:
அப்புக்குட்டியார்,
அகவை81.

தெருக்கரை மடத்தடி,
திருநெல்வேலி.
30.05.2003

- விகடகவி.

முன்னாள் பிரதேச சபைத் தலைவர்கள் பயன்படுத்திய

# 'பிக்கப்'களை மீளப்பெற்றுத்தரும்படி பொலிஸில் முறையிட்டும் பயனில்லை

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் விசனம்

யாழ்ப்பாணம்,மே30

உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான 'பிக்கப்' வாகனங்களைப் பெற்றுத்தருமாறு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. நீண்டகாலமாகியும் அந்த முறைப்பாடுகளுக்கு இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

-இவ்வாறு உள்ளூராட்சித் திணைக்கள யாழ்பிராந்திய உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:-

கடந்த காலங்களில் யாழ்மாவட்டத்திலுள்ள 13 உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டுக்கென வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு அதிகார சபையினால் (ராண்) 6 'பிக்கப்' வாகனங்களும், உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 7 வாகனங்களும் வழங்கப்பட்டன.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் காலாவதியானது. அதனைத் தொடர்ந்து பயன்படுத்திய பிரதேச சபைகளின் தலைவர்கள் அந்தப் 'பிக்கப்' வாகனங்களை சபைகளின் செயலாளர்களிடம் மீள ஒப்படைக்குமாறு வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் திணைக்களமும், புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு அமைச்சும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தின.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு அதிகார சபையினால் (ராண்) வழங்கப்பட்ட வாகனங்களில் வலிகாமம் வடக்கு, சாவகச்சேரி ஆகிய பிரதேச சபைகளுக்குரிய வாகனங்கள் யாழ் அரச அதிபரிடமும், பளை பிரதேச சபைக்குரிய வாகனம் அப்பிரதேச சபை நிர்வாகத்திடமும் ஒப்படைக்கப்பட்டன.

ஏனையவற்றில் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு அதிகாரசபையினால் (வேலணை, நெடுந்தீவுப் பிரதேச சபை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட வாகனங்களும் -

உள்ளூராட்சித் திணைக்களத்தால் நல்லூர், ஊர்காவற்றுறை, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்கு மேற்கு, பருத்தித்துறை மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு ஆகிய ஏழு பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட வாகனங்களும் -

இதுவரை மீள ஒப்படைக்கப்படவில்லை. இதேவேளை- வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு சொந்தமான வாகனம் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் உள்ளது.

இந்த வாகனங்களை சம்பந்தப்பட்டவர்கள் மீள ஒப்படைக்காமையால் அந்தந்த சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது. அத்துடன் அவற்றுக்குரிய காப்புறுதி, வாகனவரி போன்றவற்றை உரியகாலத்தில் செலுத்த முடியாதுள்ளது.

இவ்வாகனங்களை மீளப் பெற்றுத் தருமாறு பொலிஸாரிடம் முறையிட்டு நீண்டகாலமாகிறது. இதுவரை அவை பெற்றுத் தரப்படவில்லை.

இதேநேரம், இவ்வாகனங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கடந்த மாதம் 3 ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார் என்று உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- சபைகளிடம் மீளவும் ஒப்படைக்கப்படாத பிக்கப் வாகனங்களின் இலக்கத்தகடுகளை அகற்றி அதில் சம்பந்தப்பட்டவர்களும் பொலிஸாரும் பயணம் செய்வதனை தாங்கள் அவதானித்துள்ளதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைக் கடலில்

## காணாமற்போன இரு மீனவர்கள் 3 நாள்களின் பின் கரை திரும்பினர்

வடமராட்சி,மே30

பருத்தித்துறை கடலில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் கடும் காற்றினால் அலைக்கழிக்கப்பட்டு மூன்று தினங்களுக்குப் பின்னர் கரை திரும்பியுள்ளார்கள்.

கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறையைச் சேர்ந்த இ.ஜெயச்சந்திரன் (28வயது), ந.சிவஜெகநாதன் (26 வயது) ஆகிய இரு மீனவர்களும் ஒரு படகில் பருத்தித்துறை கடலில் மீன்பிடிக்கச் சென்றனர்.

அன்று மாலை கரை திரும்பவேண்டிய அவர்கள் இருவரும் அன்று கரை திரும்பவில்லை. இதனால் சக மீனவர்கள் கடலில தேடுதல் மேற்கொண்டனர்.

இவ்வேளையில், குறிப்பிட்ட இரு மீனவர்களும் கடும் காற்றினால் நடுக்கடலுக்கு அடித்துச் செல்லப்பட்டிருந்தனர். படகில் இருந்தவாறே நடுக்கடலில் தத்தளித்த இரு மீனவர்களும் காற்றின் வேகம் குறையும்வரை காத்திருந்தனர். மூன்று தினங்களுக்குப் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் கரையை நோக்கி அவர்கள் திரும்பினர்.

இவர்கள் கரைநோக்கி வந்துகொண்டிருப்பதை தூரத்தே கடலில் நின்று அவதானித்த ஏனைய மீனவர்கள் தத்தமது படகுகள் சகிதம் சென்று இருவரையும் கரைக்கு அழைத்து வந்தனர். (ஒ-173)

### நாளை

வைகாசி 17
சனிக்கிழமை
31.05.2003
திதி : அமாவாசை
முற்பகல் 10.12 வரை
நட்சத்திரம் : ரோகிணி
பின்னிரவு: 1.48 வரை
சுபநேரம் : 2.52- 4.23
ராகுகாலம் : 9.12-10.37
(யாழ்ப்பாண நேரப்படி)

### உதய வாக்கு

கபடத்தால் கிடைக்கும் வெற்றி மலரைப்போல அழகாகத்தான் இருக்கும். ஆனால் விரைவில் வாடிவிடும்.

## விடுமுறையில் கடைகளைத் திறப்பதால் மற்றைய வர்த்தகர்களுக்குப் பாதிப்பு

### ஒத்துழைக்கக் கோருகிறது சமாசம்

விடுமுறை தினங்களில் சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்படுவதினால் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் ஏனைய வர்த்தக நிலையங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. ஆகவே, விடுமுறை நாள்களில் வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு வழங்குங்கள் - இவ்வாறு யாழ்மாவட்ட வர்த்தக சங்கங்களின் சமாசம் கோரியுள்ளது.

இது தொடர்பாக சமாசம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சனிக்கிழமைகளில் பிற்பகல் 2மணிக்கு, பின்பும் ஞாயிறு மற்றும் போயா வர்த்தக விடுமுறை தினங்களிலும் சில வர்த்தக சங்கங்களுக்கு உட்பட்ட கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் அச்சங்கங்களை அண்டிய பகுதிகளில் உள்ள ஏனைய சங்கங்களின் கீழுள்ள கடை உரிமையாளர்கள், வர்த்தக ஊழியர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, சகல வர்த்தக சங்கங்களும் ஒரே நடைமுறையினை பின்பற்றவேண்டும். சனிக்கிழமைகளில் பிற்பகல் 2மணிக்குப் பின்பும் ஏனைய விடுமுறை தினங்களிலும் சகல வர்த்தக சங்கங்களும் தமது அங்கத்தவர்களின் கடைகளை மூடிவித்து ஒத்துழைக்க வேண்டும். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளன நிர்வாக சபைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ-ரி)

## காணாமற்போனோர் குறித்த விசாரணை இன்று ஆரம்பம்

படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான 5ஆம் கட்ட விசாரணைகள் இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளன. நாளை சனிக்கிழமை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்திலும், எதிர்வரும் முதலாம், 2ஆம் திகதிகளில் மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் விசாரணைகள் நடைபெறும்.

இவ்விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர்களுக்கு அழைப்புக்கடிதங்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

இதுவரையில் விசாரணைகளுக்கு அழைக்கப்படாதவர்கள் கட்டம் கட்டமாக அழைக்கப்படுவர் என்றும் -

விசாரணைகளை மேற்கொள்ள வந்துள்ள குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஒ-5)

# யாழ்ப்பாணம், புங்கங்குளம்
# வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
# ஆலய வருடாந்த பொங்கல் விழா சிறப்பிதழ்

## 30.05.2003

## வில்வையம்பதியில் எழுந்தருளி வினை தீர்க்கும் அன்னை!

பக்திப் பெருக்கும் தெய்வீக அம்சங்களும் நிறைந்து விளங்கும் பல ஆலயங்கள் யாழ். குடாநாட்டுக்கு பல பாகங்களிலும் திலகமிட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலைகள் காரணமாகப் பல திருத்தலங்களின் திருவிழாக்களும் பூசைகளும் வேறுவேறு இடங்களில் நடைபெற்றதும் அடியார்களின் நேர்த்திக்கடன்கள் வேறு வேறு ஆலயங்களில் நிறைவேற்றப்பட்டதும் நம் பிரதேச வழக்கமாகியிருந்தது.

### அம்பாளின் அருட்பார்வை

இந்த வகையிலே, யாழ்.குடாநாட்டின் புங்கங்குளப் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருள் ஆட்சியே ஆகும். ஆனால், இந்த அம்மனின் புங்கங்குள அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்டதொன்றன்று. இற்றைக்கு சுமார் 37 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

### அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு, அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத்தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் அற்புதங்களையும் பல



*வில்வை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை*
*அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை*
*பொல்லா வினையகல புங்கங்குளத்தார் புகுந்து*
*கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.*

தடவைகள் கண்டு வியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆதரிக்க முற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ்.நகரிலே புங்கங்குளப் பகுதியிலே வில்லை மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இவ்வாலயம் தெய்வீக நிலையினால் மிகமிக மேலோங்கி உள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.

### தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்திற்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப்பரவசநிலை, அம்பாளைத் தரிசிக்க வரும்போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்துவிடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம், அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோசங்கள் நீங்கி விடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

### நம்பியே கைதொழுவோம்

அம்பாளின் வருடாந்த பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். அடியார்கள் அனைவரும் யாழ்.நகரின் புங்கங்குளம் பகுதியிலே வில்வையடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட்பெருந்தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உய்வார்களாக!

*'மேன்மை கொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்'*

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே!

நம்பியே கை தொழுவார்க்கு பிணி நீங்கிடுமே!!


## விழா சிறப்புற வாழ்த்துவோர்:

கட்டடப் பொருள்கள்,
உழவு இயந்திர லாண்ட்மாஸ்ரர்
உதிரிப்பாகங்கள்
விநியோகஸ்தர்கள்
**கே.வைத்திலிங்கம் கொம்பனி**
33, 40, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2075

சைக்கிள், சைக்கிள்
உதிரிப்பாகங்கள் மற்றும்
மின்சார உபகரணங்கள்,
ரேடியோ, ரீ.வீ., டெக்
முதலியவற்றை
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
**சிவாஸ் சென்ரர்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கோயில்களுக்குத் தேவையான
பட்டு, சரிகைத் துணிகள்,
பட்டுவேட்டிகள், சால்வைகள்
மற்றும் நவீன சாறி வகைகள்
முதலியனவற்றுக்கு நாடுகள்:
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
54, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும்
அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் மிக்க
நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறி நதியா நகைமாடம்**
2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வில்வையடி
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
**கச்சான் பிஸ்கட்**
தயாரிப்பு: T.S.நாதன்
இல.96/1,
ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2491

தரமான நல்லபொருள்களை
நீங்கள் நயமாக வாங்கிக்
கொள்ள நாடுங்கள்:
**புதிய முருகன் வணிக நிலையம்**
(நியூ முருகன் றேடர்ஸ்)
56A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல
தரமான மரங்களை
எந்நேரமும் சகாய விலைகளில்
பெற்றிட
நாணயம்மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க.முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகூட்டும் தங்க
ஆபரணங்களுக்கு நீங்கள்
நாடவேண்டிய இடம்:
**அலங்கார் நகை மாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2920

பவுண், பொன், வெள்ளி
வாங்கவும் விற்கவும்
நம்பிக்கையான ஸ்தாபனம்:
**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகை மாடம்**
191(343), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

குளிர்பானம் தயாரிக்கும்
தரமான பொருள்களுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்:
**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்**
161, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2219

நவீன டிசைன்களிலான, நாகரிகத்துக்கேற்ற
தங்கப் பவுண் நகைகளை
நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜுவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை
ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்:
**சானுகா நகைமாடம்**
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 3700

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில்
அழகிய தங்க நகைகளைக் குறித்த
தவணையில் செய்து பெற்றுக்கொள்ள
**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய நகைகளுக்கு
நம்பிக்கை வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகைமாளிகை**
116V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்:
**சிறி அமலா நகை மாளிகை**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2225800

மின் உபகரணங்கள், மின்சாரப்பொருள்கள்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள
**அபிராமி எலக்றிக்கல்ஸ்**
62/31, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-27956)

# மிருக பலி பற்றி இந்துமதத்தின் நிலைப்பாடு என்ன?

தொண்ணூற்றைந்து இடம்பெயர்வுக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் இந்து சமயப் போக்குகள் பற்றிக் கவனத்தில் கொள்ளும் எவருக்குமே அதிர்ச்சிதரும் விடயமாக உள்ளது இந்துமதச்சடங்கு என்ற போர்வையிலே நடைபெறுகின்ற மிருக பலிகளாகும்.

பசுவதைக்கஞ்சி இரவோடிரவாகக் கடல்கடந்த ஞானப்பிரகாசரில் இருந்து ஆறுமுகநாவலர், கார்த்திகேச ஐயர், சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார், சேர் பொன்.இராமநாதன் முதலிய சைவக்கற்பக விருட்சங்கள் பல விழுதெறிந்த இந்தச் சைவக் கழனியில் மதம் என்ற பலிபீடத்தில் கிடத்தி கிரியை என்ற வாளால் அறுத்து குருதி அபிஷேகம் செய்வது குரூரமானது.

கவுணாவத்தை வைரவரும், நாவற்குழி ஐயனாரும், கொல்லன் கலட்டி காளியும் குருதி கேட்டார்கள் எனக்கூறி நூற்றுக் கணக்கில் ஆடுகளும் கோழிகளும் அறுக்கப்பட்டன. மதத்தின் பெயரால் அரங்கேறிய இந்த மாபாதகத்தை தடுக்கத் துணிந்தோர் எல்லாம் வாள் கத்திகளால் விரட்டப்பட்டனர். இந்து மதத்தை நிறுவன ரீதியாக முன்னெடுத்துச் செல்ல பாடுபடுகின்ற அமைப்புக்களால்கூட இந்தக் கொடுமைகளை முடிவுக்குக் கொண்டுவரமுடியவில்லை. நெருங்கி வந்தால் நொருங்கி விடுவீர்கள் எனச் சண்டியர்கள் சம்பவத் தலங்களில் நின்று அச்சுறுத்தியமையே இதற்குப் பிரதான காரணமாகும்.

இவை எல்லாவற்றிற்கும் அசைக்க முடியாத தெய்வபக்தியோ, மூடநம்பிக்கையோதான் காரணம் என்று சொல்வதைவிட அப்பட்டமான வியாபார நோக்கமே காரணம் என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். பலியிடுவதற்கென உயிர்களைக் கொண்டு சென்றவர்கள் உயிர்களை வதைக்கு முன்பாகவே பல சித்திரவதைகளைப் புரிகின்றனர். கடாக்களை கொழுத்துத் திரண்டனவாக உருமாற்றிக் காட்டவென உணவுக்குப் பதிலாக சொப்பிங் பைகளை உருட்டி வாய் வழி திணித்து அவற்றின் வயிறுகளை உப்பச் செய்கின்றனர். கொழுத்துத் திரண்டு காட்சியழித்த ஆடுகளைக் கூறுபோட்டு மாமிசத்தைக் கொள்வனவு செய்யவென பாதயாத்திரையாகக்கூட வந்து பைகளோடு காத்திருந்தனர் பக்த கே(ா)டிகள். இந்தப் பக்தி வர்ணம் பூசப்பட்ட கசாப்புத் திருவிழாவுக்கு இடைத்தரகர்கள் வேறு முண்டியடித்தபடி!

இவற்றையெல்லாம் வெறுமனே காட்டுமிராண்டிகளின் திருவிழா என்று ஒதுக்கி விடலாம். ஆனால், மாமிச ஏப்பத்தோடு இவர்கள் வம்புக்கிழுப்பதோ இந்துமதத்தை, இந்துக்களுடைய பிரமாண நூல்களை, வேதங்கள் கூட பலியிடுதலை ஆதரிக்கின்றனவே என வேள்வி இறைச்சி தொடர்ந்து கிடைக்கவேண்டுமே என்ற ஆதங்கத்துடன் பல கல்விமான்கள் கூட இந்நடைமுறைக்கு ஆதரவாகக் குரல் எழுப்புகின்றனர். எனவேதான், மிருகபலி பற்றிய இந்துமதத்தினுடைய உண்மையான நிலைப்பாடு பற்றி தெளிவுபடுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வேதங்களில் பசு "கொல்லப்படத்தகாதது" என்ற பொருள்பட "அகன்யா" என அழைக்கப்பட்டது. வேதகால சமுதாய வாழ்வில் ஒருவனிடம் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கொண்டே அவனுடைய பொருளாதார அந்தஸ்து தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வேத கால சமூகத்தில் மக்களால் விரும்பி உண்ணப்பட்ட உணவுப்பண்டங்கள் பற்றி ஆராய்கின்றபோது மாமிசப்பண்டங்கள் பற்றி அறியமுடியாதுள்ளது. பார்லி மாவையோ, அரிசிமாவையோ நெய் சேர்த்து பிசைந்து குழைந்த அனலில் சுட்டுத் தேனில் ஊறவைத்துத் தயாரிக்கப்படுகின்ற "அபூபம்" என்ற உணவுப்பதார்த்தமும், கோதுமையைச் சுத்தம்செய்து வறுத்து இடித்து வெல்லத்துடன் கலந்து செய்யப்படும் "அப்யூச" என்ற தின்பண்டமும், ஸ்வஸ்திகம் மோதகம், ஸந்தையா வர்த்தகம் முதலிய இனிப்புப் பண்டங்களும் வேத கால மக்களால் விரும்பி உண்ணப்பட்டன. இவைதவிர பாற்பொருள்கள், தேன், பழங்கள் ஆகியனவும் நுகரப்பட்டன.

ஆயினும், ஆளும் வர்க்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அசுவதேம், ராஜசூயம் போன்ற சிலவகை யாகங்களின்போது குதிரை, மாடு ஆகியவை பலியிடப்பட்டன என்பது பற்றியும் வேத இலக்கியங்களினூடாக அறிய முடிகிறது. அதுபோன்றே வேத காலத்தில் நடைபெற்ற ஒரு திருமண விழாவின்போதும் பசு மாமிசம் பரிமாறப்பட்டமை பற்றியும் ரிக் வேதத்தில் குறிப்பு உள்ளது.

ஆனால், இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் யாதெனில் வேதங்கள் முற்று முழுதாகவே விதி நூல்கள், பிராமண நூல்கள் என்ற வகைப்பாட்டுக்குள் மட்டும் அடங்குவனவல்ல. அவை தாம் தோன்றிய காலத்திலிருந்த சமுதாயத்தில் வாழ்ந்த பல்வேறு பிரிவினரும் பின்பற்றி வந்த வாழ்வியற் கோலங்களை ஆங்காங்கே பதிவுசெய்து கொண்ட சமுதாயப் பதிவேடுகளாகவும் மிளிர்கின்றன. ஆகவே, வசிட்டர், வாமதேவர், விசுவாமித்திரர், பரத்துவாசர் போன்ற அனுபூதிமான்களுடைய கட்டளைகள், அருளுரைகள், உபதேசங்கள் ஆகியவற்றை மட்டுமே உள்ளடக்கமாக வேதங்கள் கொண்டிருக்கவில்லை. அக்காலத்தில் ஜனக்குழுக்களாக வாழ்ந்த சாதாரணர்களுடைய சமூக வாழ்வியற் கோலங்களையும் ஆங்காங்கே காட்சிப்படுத்தியுள்ளன. அந்தவகையில் வேதகால சமூகத்தில் இருந்த பூரு யதுர் வச, பரத, துருஹ்ய போன்ற பல்வேறு ஜனக்குழுக்கள் பற்றிய குறிப்புக்கள் வேதங்களில் இடம்பெற்றுள்ளமையும் இங்கே கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும். அதே

## ஒரு பார்வை

வேளை, நிறைமொழி மாந்தர் அணையிற் கிளர்ந்த மறைமொழிகளும் வேதங்களில் இல்லாமலில்லை.

ஆனால், இத்தகைய அறிவுரைகளிலும் கட்டளைகளிலும் மிருக பலியை ஊக்குவிப்பதான எத்தகைய கருத்தும் இடம்பெறவில்லை என்பது இங்கே கவனிக்கத்தக்கது. மாறாக உயிர்கள் அனைத்தையும் சமநோக்கில் தரிசிக்கின்ற தன்மையும் எல்லா ஜீவராசிகளையும் இயற்கையின் குழந்தைகளாகக் கருதுகின்ற உயர்ந்த பண்புமே வேதங்களில் விரவிக்கிடக்கின்றன.

*"எல்லா உயிர்களும் என்னை நண்பனாகக் கருதட்டும்*
*எல்லா உயிர்களையும் என் நண்பனாகவே கருதுவேனாக"*
*(யசுர்வேதம் 36:18)*

*"பூமி நமது தாய், நாம் பூமியின் பிள்ளைகள்*
*மேகம் நம்தந்தை அவை நம்மைப் புனிதமாக்கி*
*நமக்குத் தெம்பு ஊட்டுகின்றன"*
*(அதர்வவேதம் 12:1:12)*

*"எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக*
*எல்லோரும் அன்புடன் உரையாடட்டும். அனைவர் உள்ளங்களிலும் ஒற்றுமையுணர்வு நிலவட்டும். பகைமையை வளர்க்காத அறிவை பெறட்டும் மூதறிஞரான பெரியோர் எந்தக் காலத்திலும் கடவுள்*
*அறிவு பெற்று அவரை வழிப்படுத்துவதிலேயே தம் காலத்தை*
*கழித்தது போல நீங்களும் நல்லறிவு பெற்று கடவுள்*
*வழிபாட்டில் முனைந்திருங்கள் ----- நீங்கள் அனைவரும்*
*ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொண்டு தத்தம் காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடியுங்கள்"*
*(ரிக் 10:191:2:4)*

இவை சில எடுத்துக்காட்டுகளே. இவைபோல அமைந்த வேதரிஷிகளின் ஆணைகளில், அறிவுரைகளில் எந்த மறுவையும் காணமுடியாது. ஆயினும் சமூக வாழ்வியற் கோலங்

ச.முகுந்தன்
உதவி விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

களைப் பதிவுசெய்துகொண்ட வகையில்தான் சர்ச்சைகள் எழுகின்றன. ஆயினும், சமூக வாழ்வியல் கோலங்களைப் பதிவுசெய்துகொண்ட வகையில்தான் சர்ச்சைகள் எழுகின்றன. ஆயினும், வேதகால சமூகத்தில் பல போர்கள் நடைபெற்றதையும்தான் அறியமுடிகிறது. உதாரணமாக சுதாஸ் மன்னன் பத்து வேறுபட்ட ஜனக்குழுத் தலைவர்களுடன் நடத்திய தசராஜ்ஞ போரைக் குறிப்பிடலாம். தசராஜ்ஞ போர் பற்றிய குறிப்புக்கள் வேதங்களில் சிலாகிக்கப்பட்டிருப்பதைக் கருத்திற்கொண்டு போர் செய்யவேண்டும் என்பதனை வேத கட்டளையாகப் பிரசாரம் செய்ய முனைவதும் மாந்திரிகம், வசியம் பற்றி வேதங்களில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை (அதர்வம்) வைத்து வேதங்கள் அபிசாரணிய மார்க்கத்தையே போதிக்கின்றன என்ற முடிவிற்கு வருவதும் சோமபானம், சுராபானம் பற்றிய செய்திகளைக் கருத்திற்கொண்டு வேதங்கள் மது அருந்தலை ஏற்றுக்கொள்கின்றன என வாதிடுவதும் எவ்வளவிற்கு நகைப்பிற்குரிய விடயமோ அத்தகையதே வேதங்கள் பலியிடுதலைப் போதிக்கின்றன என்ற வாதமுமாகும். எழுதாமறையாக - சப்தமாக - சுருதியாக - செவிவழிச் செல்வமாகப் பாதுகாக்கப்பட்ட வேதச் செய்யுட்களில் கட்டளையோடு சமூகப்பதிவுகளும் இடம்பெற்றுள்ளமை கவனத்திற் கொள்ளப்படவேண்டியதாகும். ஆயினும், வேதகால சமூகத்தில் வழிபாட்டிற்குரிய சில கிரியை முறைகளுள் பலியிடலும் நிலவியது என்பதனை மறுக்கமுடியாது.

ஆனால், மேற்படி கிரியைகளில் குறிப்பாக அசுவமேதம், ராஜசூயம் ஆகிய யாகங்களில் வழிபடுவோனுடைய உண்மையான நோக்கம் யாது என்பதை இங்கே கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். அங்கே ஊன் விருப்போ வர்த்தக நோக்கோ கருத்திற் கொள்ளப்படவில்லை. தாம் தமது சமுதாய வாழ்வில் உன்னதமாகக் கருதிய செல்வங்களை எல்லாம் இறைவனுக்கென அர்ப்பணிக்கின்ற தியாக மனநிலையுடனேயே வேத கால மனிதன் இருந்திருக்கிறான். அங்கே ஆநிரைகளே அவனுடைய செல்வம். இன்று நோட்டுக் கட்டுக்களையும் நாணயக் குற்றிகளையும் வேள்வித்தீயில் அர்ப்பணம் செய்வதை ஒத்ததாகத்தான் அன்றைய குதிரைகளையும், மாடுகளையும், ஆடுகளையும் நாம் கருதவேண்டும். அப்படியாயின், உயிர்வதை பற்றி சிந்தனை அங்கே இல்லையா என்றொரு கேள்வி எழுவதும் இயற்கையே. இதற்கும் வேதங்களில் பதில் உள்ளது. அதாவது வேள்வியின் பலனாக ஆகுதியான விலங்குகள் மீள உயிருடன் எழுகின்றன என்ற குறிப்புக்களும் வேதங்களில் உள்ளன. எனவே, பரம்பொருளில் அசைக்கமுடியாத நம்பிக்கையையும் வழிபாட்டு முறையில் தியாக உணர்வையும் கைக்கொண்ட வேதகால மக்களின் வேள்விகளோடு சுயநலமும் வணிக நோக்கமும் ஊன்விருப்பும் கொண்டு இன்றைய நாகரிகக் காட்டுமிராண்டிகள் நடத்துகின்ற கோர தாண்டவங்களை ஒப்புநோக்கல் தவறானதாகும். மேலும் "நல்ல சிந்தனைகள் எத்திசையில் இருந்து வந்தாலும் அவை எம்மை வந்தடைவதாகுக"! என்பதே வேத கால புத்திஜீவிகளின் தெளிவான நிலைப்பாடாக இருந்தது.

(தொடரும்)

# தீவக அபிவிருத்திக்கு முதலில் பஸ்சேவைகள் சீராக வேண்டும்!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மே30

தீவகப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமாயின் முதலில் அந்தப் பகுதிகளுக்கான போக்குவரத்து சீர்செய்யப்படவேண்டும்.

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் கடந்த செவ்வாயன்று உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் பனிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வங்கிகள், பல நோ.கூ.சங்கங்கள், பனை அபிவிருத்திச்சபை, விவசாயத் திணைக்களம், வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஆகியவற்றின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தீவுப் பகுதிக்கான போக்குவரத்துச் சீரின்மை குறித்து கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் ஒருமித்த குரலில் குரல்கொடுத்தனர்.

தீவுப் பகுதியின் பல்வேறு பகுதிகளுக்கும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் பஸ் சேவைகள் போதியதாகவில்லை. அத்துடன், தீவுப் பகுதிக்கு குறிப்பாக ஊர்காவற்றுறைப் பகுதிக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களில் பெரும்பாலானவை நல்ல தரத்தில் இல்லாதவை.

மேற்படி பஸ்கள் கடந்த சில வாரங்களாக பயணிகளை இடைநடுவில் அந்தரிக்கவிட்ட சம்பவங்கள்தான் அதிகம். இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள், அரச அலுவலர்கள், கூட்டுறவாளர்கள் எனப் பலரும் உரிய நேரத்துக்கு அலுவலகங்களுக்கோ பாடசாலைகளுக்கோ சமுகமளிக்க முடியாதநிலை இருந்துவருகின்றது. இதனால், மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதுடன், மனித உழைப்பும் வீணடிக்கப்படுகின்றது.

குறிப்பாக மாலைநேர பஸ் சேவைகள் சீராக நடைபெறுவதில்லை. இதனால் அரச ஊழியர்களோ அன்றி பொதுமக்களோ உரிய நேரத்தில் வீடு திரும்ப முடியாதநிலை ஏற்படுகிறது.

777ஆம் இலக்க யாழ். - ஊர்காவற்றுறை பாதையில் காலை நேரங்களில் போதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. இதனால் நூற்றுக்கும் அதிகமானோர் பல்வேறு கிராமங்களின் மத்தியில் நெடுந்தூரம் பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. எனவே, இவை அனைத்தையும் சீர்செய்யும் வகையில் நல்லநிலையில் உள்ள - பெரும் எண்ணிக்கையான பயணிகள் பயணிக்கக்கூடியவாறான பஸ்கள் தீவுப் பகுதி சேவையில் ஈடுபடுத்தப்படவேண்டும். இவ்வாறு பலரும் கருத்துத் தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரி -

தீவுப்பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வீதிகள் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் குண்டுங்குழியுமாகக் காணப்படுகின்றன. இதனாலேயே பஸ்கள் அடிக்கடி பழுதடையவும் பஸ்சேவை தடைப்படவும் காரணமாக அமைகின்றது. அத்துடன், பிரதான வீதிகளின் இருமருங்கிலும் வளர்ந்துள்ள பற்றைகள் பஸ்போக்குவரத்துக்கும் பெரும் இடையூறாகவுள்ளன.

போதிய பஸ்கள் இல்லாமை, ஆளணிப் பற்றாக்குறை காரணமாக பஸ்சேவையை சீர்படுத்த முடியவில்லை. சிலவேளைகளில் தீவுப் பகுதி பஸ் சேவையில் கிடைக்கும் வருமானமும் குறைவாகவே காணப்படுகின்றது.

எனவே, மேற்கூறிய சில பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்குமாயின் தீவுப்பகுதி மக்களுக்கு சிறந்த முறையில் பஸ் சேவையை வழங்கக்கூடியதாக இருக்கும். பொதுமக்களும் பூரண ஒத்துழைப்பினை வழங்குவதன்மூலம் பஸ்சேவை சீராக நடைபெற உதவ முடியும் - என்றார். (எ)

## யாழ்.பல்கலைக்கழகத்தின்
# வெளிவாரிக் கலைமாணிப் பரீட்சை ஜூன் மாத நடுப்பகுதியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே30

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணிப் பரீட்சைகள் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக்கழகத்திலும் அதன் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன.

கலைமாணி பகுதி IIஇற்கான பரீட்சைகள் ஜூன் மாதம் 16ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரையும் -

கலைமாணி பகுதி Iஇற்கான பரீட்சைகள் ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் 15ஆம் திகதி வரையும் - நடைபெறவுள்ளன.

நேர அட்டவணை மற்றும் பரீட்சை அனுமதி அட்டைகளை சம்பந்தப்பட்ட பரீட்சைகள் ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதான காலப் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கலைமாணி பகுதி Iஇன் 2000ஆம் ஆண்டிற்கான பரீட்சைப் பெறுபேறுகள் இன்று வெள்ளிக்கிழமை வெளியாகவுள்ளன. எனவே, மீள் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் ஜூன் மாதம் 10ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க முடியுமெனவும் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-9)



கோப்பாய் தெற்கு இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ரதோற்சவத்தின்போது எடுக்கப்பட்ட படம். (படம்: வலி.கிழக்கு, செய்தியாளர்)

# 11 ஆம் ஆண்டு நினைவுகள்

ஜனனம்
08 - 11 - 1970



வீரமரணம்
30 - 05 - 1992

## கப்டன் கெனடி (பாவாணன்)

## பத்மநாதன் மயூரன்

இழந்த இறைமைகளை மீட்பதற்காய்
இழக்க முடியாத உன்னை இழந்தோம்.
மலரும் ஈழத்தில் உன்முகம் காண்போம்.
எங்கள் நெஞ்சங்களில் வீற்றிருக்கும்
மைந்தனுக்கு எங்கள் அஞ்சலிகள்.

*பூதராயர் கோயிலடி,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*புன்னாலைக்கட்டுவன்.*

(18496)

- குடும்பத்தினர்.

# பணம் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் வர்த்தகர்களுக்கு நேர்மை முக்கியம்!

## அதனை அனுபவத்தில் கண்டவர் தொழில் அதிபர் ரஞ்சித் லியனகே

*கேள்வி:* வியாபாரி என்ற ரீதியில் நீங்கள் இன்று ஒரு நிலையான இடத்தைப் பெற்றுவிட்டீர்கள். உங்கள் முன்னேற்றத்துக்கான காரணம் என்ன? அதன் பின்னணி என்ன?

*பதில்:* எனது இந்த நிலைக்கு எனது தந்தை பின்பற்றிய நல்ல கொள்கைகள்தான் காரணம். பணம் கொடுக்கல் வாங்கலில் எனது தந்தை பின்பற்றிய வழியை நானும் பின்பற்றுகின்றேன். கொடுக்கல் வாங்கல் விடயத்தில் எனது தந்தை நேர்மை தவறமாட்டார். இதன்மூலம் அவர் நம்பிக்கையை வளர்த்துக்கொண்டார். இதன் மூலம் தான் எனது நிறுவனம் வளர்ச்சி கண்டது.

*கேள்வி:* ஜப்பானில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து, விற்பனை செய்து வந்த நீங்கள் இன்று சீனாவிலிருந்து புதிய மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வது பற்றிக் கூறுங்கள்.

*பதில்:* ஜப்பானில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து விற்பனை செய்வது சிரமமான தொழில். ஜப்பானில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் விலை இலங்கைக்கு இறக்குமதியான பின்னரே தீர்மானிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள்களின் விலைகள் நாளுக்கு நாள் மாறுபடுகின்றன. ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் மோட்டர் சைக்கிள்களை ஓடும் நிலைக்குத் திருத்த வேண்டியிருப்பதால் சில வேளைகளில் நஷ்டமும் ஏற்படுகின்றது. அத்துடன் உத்தரவாதம் வழங்க முடியாது.

புதிய மோட்டர் சைக்கிள்களை இறக்குமதி செய்து விற்பனை செய்வதில் இந்தப் பிரச்சினைகள் இல்லை. உத்தரவாதம் வழங்கமுடியும். பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்யவும் முடியும். இதனால் சீனாவிலிருந்து புதிய மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து விற்பனை செய்வது எளிது.

*கேள்வி:* இன்று இலங்கையில் சீன மோட்டார் சைக்கிள்களையும் நீங்கள் மாத்திரமா இறக்குமதி செய்கின்றீர்கள்?

*பதில்:* இல்லை. அது பற்றியும் கூறத்தான் வேண்டும். சீனா பெரிய நாடு. நாடு முழுவதும் மோட்டார் சைக்கிள உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. இவற்றில் சில தொழிற்சாலைகள் தான் சர்வதேச தரத்திற்கு மோட்டார் சைக்கிள்களைத் தயாரிக்கின்றன.

இருந்தும் இது குறித்து அறியாத எம்மவர் சிலர், உலகத்தரத்துக்கு ஒவ்வாத சீன மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து பல்வேறு பெயர்களில் விற்பனை செய்கின்றனர். இதனால் சீனாவின் முதல்தர மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் எமக்கும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. சர்வதேச தரத்துக்கு ஒவ்வாத சீன மோட்டார் சைக்கிள்கள் விற்பனையாவதால் சீன மோட்டார் சைக்கிள்கள் தரம் குறைந்தவை என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்படுகின்றது.

*கேள்வி:* உங்கள் துறையில் நீங்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் என்ன?

*பதில்:* மோட்டார் சைக்கிள் போன்ற சிறிய வாகனங்களுக்கு நிதி உதவி அல்லது குத்தகை வசதி பெறுவதில் கொள்வனவாளர்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.


குளிர்சாதனப்பெட்டி கொள்வனவு செய்வதற்கு நிதி நிறுவனங்கள் நிதியுதவி வழங்குகின்றன. ஆனால். அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் போன்ற ஆவணங்களைக் கொண்ட மோட்டார் சைக்கிள்களுக்கு உதவ நிதி நிறுவனங்கள் பின்நிற்கின்றன. பஸ், லொறி போன்ற பெறுமதி அதிகமான வாகனங்களுக்கு நிதிபெறும் போது அனுபவிக்கும் அதே நடைமுறை சிறிய வாகனமான மோட்டார் சைக்கிள்களுக்கும் இருக்கின்றது. இந்த நடைமுறை மாற்றப்பட வேண்டும்.

*கேள்வி:* நீங்கள் மோட்டார் சைக்கிள் இறக்குமதி, விற்பனை செய்வதுடன் இறால் பண்ணைத்துறையிலும் ஈடுபடுகின்றீர்கள். அதுபற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* இறால் பண்ணைத்துறையில் என்னுடன் பங்குதாரர்கள் இருக்கின்றனர். இது லாபம் தரும் தொழிலாக இருந்தும் அரசியல்வாதிகள் இத்துறைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயங்குகின்றனர்.

தேர்தல் காலங்களில் இறால் பண்ணை தொடர்பாக அரசியல்வாதிகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்குகின்றனர். ஆனால், தேர்தல் முடிந்தபின் அந்த வாக்குறுதிகள் நடைமுறைக்கு வருவதில்லை. அவை காற்றில் பறந்து விடுகின்றன.

இவ்வாறு கூறினார் ரஞ்சித் லியனகே. ★



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் ரஞ்சித் லியனகேயை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் சட்டத்தரணி செ.குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

**ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 27ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் ரஞ்சித் லியனகே.**

**நீர்கொழும்பு தலக்கொட்டுவ பகுதியில் பழைய மோட்டார் சைக்கிள் களைக் கொள்வனவு செய்து அவற்றைப் புதுப்பித்து விற்பனை செய்து வந்தார் தந்தை.**

**தந்தையின் தொழிலில் ஆர்வங்கொண்ட மகன் கொச்சிக்கடையில் மோட்டர் சைக்கிள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிறுவனத்தை தந்தை ஆரம்பித்தபோது அவருடன் இணைந்து கொண்டார்.**

**இன்று சீனாவிலிருந்து மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து நாடு முழுவதும் விநியோகிக்கின்றார் கொச்சிக்கடை ரகல் மோட்டர்ஸ் அதிபராக உயர்ந்திருக்கும் ரஞ்சித் லியனகே.**

**ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் ரஞ்சித் லியனகேயை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளரு மான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.**

**செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.**

# கிராம மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஒன்றிணைவோம்!

## ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் அழைப்பு

யாழ்ப்பாணம்,மே30

கிராமப்புற மக்களின் தேவைகளை இனங்காண்பதிலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் அரச திணைக்களங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம்.

மீள்குடியமர்வு கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் மெலிஞ்சிமுனைக் கிராமம் தெரிவு செய்யப்பட்டது தொடர்பான திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடல் கடந்த புதன்று உதவி அரச அதிபர் தலைமையில் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தித் திணைக்களம், ஊர்காவற்றுறை பிரதேச சபை ஆகியவற்றின் அதிகாரிகளும், மெலிஞ்சிமுனைக்கிராம பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் பணிமனை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

உதவி அரச அதிபர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களின் தேவைகள் இன்று பல மடங்குகள் அதிகரித்துள்ளன. கல்வி, போக்குவரத்து, மருத்துவம், சந்தை வாய்ப்பு என மக்களின் தேவைகள் விரிவடைந்துகொண்டே செல்கின்றன.

இந்த வகையில் தீவுப்பகுதியில் குறிப்பாக பல வருடங்களின் பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் பகுதிகளில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். குடியிருப்பு, மலசலகூடம், குடிதண்ணீர், மிதிவெடிகள் எனப் பலவேறு பிரச்சினைகள் இவ்வாறு உள்ளன.

மேற்படி பிரச்சினைகள் அனைத்தையும் விரைவில் நீக்கும் வகையில் அதாவது அவற்றுக்கு முடிவு காணும் வகையில் அரச திணைக்களங்கள் ஒன்றிணைந்து, முழுவேகத்துடன் செயற்படவேண்டும். ஒவ்வொரு அரச ஊழியர்களும் இந்த விவகாரத்தில் பங்குகொள்ளவேண்டும். இவற்றுக்குத் தனியான முகாமைத்துவம் அவசியமாகும் - என்றார். (எ)

# கசிப்பு வழக்கில் 8 பேருக்கு 71ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,மே30

அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்தமை மற்றும் கசிப்பு வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் 8 பேருக்கு நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றம் 71ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயராசா-ஜீவதர்சினி என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

அம்மன் வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த சண்முகநாதனம் தனேஸ்வரன் என்பவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும்-

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காசிநாதன் ரெங்காதரன், ஆனைக்கோட்டை, உயரப்புலத்தைச் சேர்ந்த கந்தையா துரைராசா மற்றும் நீர்வேலி தெற்கு, பூதர்மடத்தைச் சேர்ந்த விநாசி. ஞானப்பிரகாசம் ஆகிய மூவருக்கும் தலா ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

யாழ்.ஆயுக்கர் வீதியைச் சேர்ந்த வடிவேல் செல்லக்கிளி என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2ஆயிரம் ரூபா தர்மப் பணமும்-

குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியைச் சேர்ந்த மவுதீன் மரியதாஸ் மற்றும் நாவாந்துறை பிபிலியன் வீதியைச் சேர்ந்த சத்தியசீலன் ஜெயசிறி ஆகிய இருவரும் தலா 15ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 3ஆயிரம் ரூபா தர்மம்பணமும் -

செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (ஒ-5)

# ரஞ்சித் படுகொலை சூத்திரதாரி 'ஜகத்' என்கின்றனர் பொலீஸார்

## நான்கு பொலீஸ் குழுக்கள் வேட்டை

கொழும்பு,மே30

தென்மாகாண சபை அமைச்சர் எம்.கே.ரஞ்சித் படுகொலை சூத்திரதாரி, வெலியத்த பல்லத்தர பகுதியைச் சேர்ந்த 'பல்லத்தரஜகத்' என்பவரே என்று பொலீஸார் இனங் கண்டுள்ளனர்.

அவரைக் கைதுசெய்யும் வேட்டையில் தென்பகுதியிலுள்ள நான்கு பொலீஸ் நிலையங்களின் நான்கு குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

தற்பொழுது விளக்கமறியலில் இருந்துவரும் லந்தேவத்த பாலயா என்பவரின் நல்ல நண்பனாக பல்லத்தரஜகத் இருந்து வருகிறார் எனவும் பொலீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லந்தேவத்த பாலயாவின் பாதாள உலகக் கோஷ்டிக்கும் அமைச்சர் ரஞ்சித்துக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்துவரும் பகையே கொலைக்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது.

பல்லத்தரஜகத் தற்பொழுது தலைமறைவாகியுள்ளார். கொலையில் சம்பந்தப்பட்ட ஏனைய சந்தேக நபர்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஒளிந்திருக்கின்றனர் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (எ)

## ரோலரைப் பயன்படுத்தி

# மன்னார் கடலில் மீன்பிடிக்க குருநகர் மீனவருக்கு அனுமதி

அரியாலை,மே30

'ரோலர்' படகுகள் மூலம் மீன்பிடித்துவந்த குருநகர் பகுதி மீனவர்கள் கடற்றொழிலை தற்காலிகமாக மன்னார் கடற்பகுதிக்கு மாற்றியுள்ளனர்.

தற்போது வீசும் கடும் காற்று மற்றும் கடல் கொந்தளிப்பால் குடாக்கடலில் 'ரோலர்' மூலம் மீன்பிடிக்க முடியாதுள்ளது. இதனால் மன்னார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துடன் குருநகர் மீனவர்கள் பேச்சு நடத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து மன்னார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுமதியுடன் மன்னார் கடற்பகுதியூடாக தற்காலிகமாக 'ரோலர்' மூலம் கடற்றொழிலை மேற்கொள்வதற்கு குருநகர் மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அனுமதியை அடுத்து குருநகர் பகுதி மீனவர்கள் தமது 'ரோலர்' படகுகளுடன் மன்னார் கடற்பகுதியை நோக்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. (ஒ-17)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1956 - 10 - 04



இறப்பு 2002 - 09 - 06

### சிவஞானம் நித்தியானந்தம் (ஆனந்தம்)

(மினிபஸ் உரிமையாளரும், லட்சுமி ஸ்ரோர் 'உரிமையாளரும், வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவரும், யாழ். மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் உபதலைவரும்) .

**திதி : 30.05.2003**

ஆனந்தம் என்ற பெயருடனே ஆனந்தமாய் இருந்தீர்கள் அப்பா!
இறைவனடி சேரும் போதும் பேரும் புகழுடன் போனீர்கள் அப்பா!
எத்தனை விழுதுகள் இருந்தும் என்ன என் தலைவர் இல்லையே-ஆறுதல் கூற
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அப்பா என்று அழைக்க நீங்கள் இல்லையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்.

சீரணிச்சந்தி,
சண்டிலிப்பாய். (18529)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 16 - 11 - 1925



உதிர்வு 28 - 04 - 2003

### திருமதி கனகரட்ணம் சிவயோகம்

நல்வழி வாழ்ந்து வழிகாட்டிய அன்னையே!
அமைதியுடன் பழகிக் கொண்ட அத்தையே!
அன்புக்கரம் நீட்டிய எங்கள் பாட்டியே!
பொறுமையுடன் அரவணைத்த எங்கள் பூட்டியே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து என்றும் உங்கள் நினைவில் வாழும்...

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

6/2, கண்டி வீதி,
புறாடி முன் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம். (18521)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

அன்னை மடியில் 1936 - 11 - 19



சிவன் அடியில் 2003 - 04 - 30

### அமரர் விசுவநாதர் பராக்கிரமசிங்கம்

(முன்னாள் ஆளணி முகாமையாளர், இ.போ.ச.)

திதி: சதுர்த்தசி 30.05.2003 வெள்ளிக்கிழமை

*பாசத்தின் பிறப்பிடமாய்*
*நேர்மையின் திருவுருவாய்*
*அறிவூட்டிய ஆசானாய்*
*எமது இதயங்களில் வாழும்*
*அமரர் தந்தையே!*

உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

30.04.2003 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் விசுவநாதர் பராக்கிரமசிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்து இன்று (30.05.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும் பலவழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி உறுதுணை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தந்தி, தபால், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எல்லளை, மாதகல். (18528) - குடும்பத்தினர்.

## வீதி விபத்தில் இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம்,மே30

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதால் ஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ் விபத்தில் மல்லாகத்தைச் சேர்ந்த பரராசசிங்கம் சுமணன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இளைஞர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## தொழிலாளி படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே30

வீட்டுக்கு கூரை அமைத்துக் கொண்டிருந்த தொழிலாளி மீது கூரை மரம் தவறி விழுந்ததில் அவர் படுகாயமடைந்தார்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் நடந்த இச்சம்பவத்தில் வல்லிபுரத்தைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான செ.சித்திரவேலாயுதம் (வயது 38) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இவர் ஆபத்தான நிலையில் முள்ளியவளை வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-5-15)


**HAIR STYLE**
**கேக் ஐசிங்**

புதிய பிரிவு
02-06-2003
திங்கள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

- அனுமதிகள் முன்கூட்டியே வழங்கப்படுகின்றன.

(C/28129)

**தாரிகை**
M.M.V. வீதி, நெல்லியடி.


## 6ஆம் மாத நினைவலைகள்

தோற்றம் 1969 - 11 - 30



மறைவு 2002 - 12 - 04

### அமரர் கந்தையா விஜயகாந்தன்

உங்களுடன் வாழ்ந்தது சிறிது காலமானாலும் - அதில் பகிரப்பட்ட அன்பு நீண்டது
உங்கள் கனவுகள் இடையில் தொலைந்தாலும் - அதை உங்கள் மகன் நிறைவேற்றுவான்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (18530) - குடும்பத்தினர்.

## 42ஆவது பிறந்தநாள் உணர்வலைகள்

மண்ணில் 30 - 05 - 1961



மனங்களில் 25 - 08 - 2002

### கேணல் ராஜு

(அம்பலவாணர் நேமிநாதன்)

உயர் கல்வியைத் துறந்தாய், உத்தியோகத்தை இழந்தாய்
உற்றாரை மறந்தாய், உணர்வுடன் புறப்பட்டாய்
உறுதியுடன் நடந்தாய், உறக்கத்தைக் கலைத்து
உதிரத்தால் விடுதலைப்பயிர் வளர்த்தாய்.

தலைவனின் தளபதியானாய், தமிழீழத்தின் தூணாய் நின்றாய்
தமிழீழத்தின் விஞ்ஞானியென்ற பெயரெடுத்தாய்
தரணிபோற்றும் தலைமகன் ஆனாய்
தமிழீழம் மலருமுன் எங்கே சென்றாய்?

உன்நினைவு மாறாத:
உடன் பிறப்புக்கள்.

ஏழாலை மேற்கு. (18486)


**PRINCE** துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்

**பிரின்ஸ்**
**நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்**

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.



15 வருட உத்தரவாதம் கொண்டது.

Access Graphics

ஏக விநியோகஸ்தர்கள்.
**செனற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-4, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்கள்; பொதுமக்களுக்குப் பொலீஸ் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மே30

உண்மையான இலக்கத்தகடு இல்லாத வேறு தகடுகளில் இலக்கங்கள் எழுதப்பட்ட வாகனங்கள் தொடர்பாகவும் இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்கள் குறித்தும் பொதுமக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுனில் விஜயசேகர கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டின் பல பகுதிகளிலும் களவுகள், ஆள்கடத்தல் போன்ற சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் வடமராட்சியில் கடத்தப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவன் இலக்கம் இல்லாத வெள்ளை வானில் வந்தவர்களாலேயே கடத்தப்பட்டுள்ளார்.

இதேபோன்று இலக்கம் இல்லாத மோட்டார் சைக்கிள்களில் செல்லும் திருடர்கள் வீதியில் செல்லும் பெண்களிடம் விலாசம் கேட்பது போல் நடித்துவிட்டு பெண்களின் கழுத்தில் உள்ள நகைகளை அறுத்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

இது தொடர்பான முறைப்பாடுகளும் பொலீஸ் நிலையங்களில் அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளன - என்றார்.

இதனால் இலக்கமில்லாத சகல வாகன உரிமையாளர்களையும் பொலீஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்கி வருகின்றனர் எனவும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

இது விடயத்தில் பொதுமக்களும் விழிப்பாக இருந்து இதுபோன்ற களவு, ஆள்கடத்தல் செயல்களை ஒழிக்க முன்வரவேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(ம-180)




வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி சபை, வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் நடத்திய இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வில் ஆழியவளை திலீபன் வைத்தியசாலைப் பொறுப்பாளர் செல்வி ஈழவாணி பெண் ஒருவருக்கு மூக்குக் கண்ணாடியை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# இடைக்கால நிர்வாகம் அமைப்பதில் சட்டச்சிக்கல்கள் எழவாய்ப்பில்லை!

## தென்னிலங்கைச் சட்டநிபுணர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே30

விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதில் சட்டச் சிக்கல் எதுவும் எழவாய்ப்பில்லை.

- இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் சட்டத்துறை நிபுணரும் 'இமடா' அமைப்பின் தலைவியுமான திருமதி நிமால்கா பெர்ணான்டோ சமீபத்தில் யாழ்வந்திருந்த இவர் யாழ்பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பங்கேற்றார். அவ்வேளையிலேயே மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிர்வாக அலகொன்று என்றும் நிரந்தரமானதாக இருக்க முடியாது தற்காலிக இடைக்கால நிர்வாக சபையை உருவாக்க அரசமைப்பில் இடமில்லை என்று கூறப்படுகிறது. இந்நிலையில் காலச்சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளவேண்டும். இதன் அடிப்படையில் மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்த இடைக்கால நிர்வாகசபையை அமைப்பது சாத்தியமே.

இதில் சட்டச்சிக்கல் எழவாய்ப்பில்லை. இதேவேளை, இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை உறுதிப்படுத்தப்படும் என்றார் அவர்.

(ஒ-ரி)

## அமெரிக்கர்களின் நிதி உதவி மூலம் பூங்கா அமைப்பு

தென்மராட்சி,மே30

சில மாதங்களுக்கு முன்னர் தென்மராட்சியின் சரசாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க கண்ணி அகற்றும் பிரிவின் நிதி உதவி மூலம் சரசாலை தென்மத்தி அம்பாள் முன்பள்ளி மாணவர்களுக்கென ஒரு விளையாட்டுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்கா அண்மையில் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைவரால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்பள்ளி அபிவிருத்திச் சபைத தலைவர் சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர். (ம-117)

## கோப்பாய் பொலீஸ் பிரிவில்

# ஐந்து மாதங்களில் 100 பேர் கசிப்பு வழக்குகளில் சிக்கினர்

யாழ்ப்பாணம்,மே30

ஐந்து மாதங்களில் மட்டும் கோப்பாய் பகுதியில் 100 கசிப்பு உற்பத்தி, விற்பனையாளர்களை கோப்பாய்ப் பொலீஸார் கைது செய்து நீதிமன்றம மூலம் தண்டனை பெற்றுக்கொடுத்துள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி சுனில விஜயசேகர. கோப்பாய் பொலீஸ்நிலையப் பிரிவில் உரும்பிராய் மேற்கு, கோண்டாவில் ஆகிய இடங்களில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களையும், வீதியில் சைக்கிளில் கசிப்பினை விற்பனை செய்தவர்களையுமே கிராம உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோரின் உதவியுடன் தாம கைதுசெய்ததாக அவர் தெரிவித்தார்.

கசிப்பு உற்பத்தி, விற்பனை தற்போது இப் பகுதிகளில் குறைந்திருபபதாகவும் பொலீஸார் தொடர்ந்தும் இதுவிடயத்தில் உஷாராக உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-180)



இலங்கை வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து குறிப்பிட்ட சில சேமிப்புக் கணக்குகளுக்கு இலவச காப்புறுதி வசதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளையில் பயனாளியான காலஞ்சென்ற நித்தியானந்தத்தின் பிள்ளைகளுக்கான 10 லட்சம் ரூபா காசோலைகளை அவர்களின் தாயாரிடம் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# நாம் ஜே.வி.பியை ஆரம்பித்தபோது தமிழரின் உரிமையை அங்கீகரித்தோம்!

## மீன்பிடி, கைத்தொழில் அமைச்சர் தெரிவிப்பு

வலி.வடக்கு,மே30

ஜே.வி.பி. கட்சியை நாம் ஆரம்பிக்கும்போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தும் வடக்கு - கிழக்கை தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக்கொண்டும் பிரசாரம் செய்தோம். ஜே.வி.பியின் முன்னாள் உறுப்பினரும் மீன்பிடி, கைத்தொழில அமைச்சருமான மஹிந்த விஜயசேகர இவ்வாறு குறிப்பிட்டார்.

தென்பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தலைமையில் கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

அவ்வேளையில், விடுதலைப் புலிகளை வரவேற்று மாத்தறை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மீன்பிடி அமைச்சர் மஹிந்த விஜயசேகர தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மீன்பிடி அமைச்சர் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி. அமைப்பை கட்டியெழுப்பியவர்களில் நானும் ஒருவன். அந்த அமைப்பை நாம் ஆரம்பத்தில் இரத்தத்தினாலும் வியர்வையாலுமே கட்டியெழுப்பினோம். இவற்றை உணராத சிலர் இன்று அடிப்படைக் கொள்கைகளுக்குப் புறம்பாக இனவாதம் பேசி வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் சிங்கள மக்களின வாழ்வுக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். உத்தரவாதம் கொடுக்கப்படுமாக இருந்தால் உயர் பாதுகாப்பு வலயம் என்ற தேவையே இல்லாமல் போய்விடும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை வடக்கு - கிழக்கு இணைப்பு என்பனவற்றை அன்றும் ஏற்றுக்கொண்டேன். இன்றும் ஏற்றுக் கொள்கின்றேன். இவற்றை செயற்படுத்துவதற்கும் அங்கீகரிப்பதற்கு முன் நின்று உழைக்கவும் தயாராக இருக்கின்றேன்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகியவற்றை ஜே.வி.பி.ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டிருந்தது. இதனை உணராத சிலரே இன்று தவறான எதிர்ப்புச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இதனடிப்படையிலே பொ.ஐ.முன்னணியில் இருந்த நானும் அமைச்சர் சந்திரசேகரனும் ஐ.தே.கட்சியுடன் இணைந்து செயல்படுகின்றோம்.

இப்பிரச்சினையினை எக்காலகட்டத்திலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியோ அன்றி ஜே.வி.பியோ முடிவுக்குக் கொண்டுவரப் போவதில்லை என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உள்ள இன்றைய அரசே இப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாகும். ஆனாலும், ஜனாதிபதியின் தலையீடுகள் அடிக்கடி இடையூறு விளைவித்தவாறு உள்ளன.

ஜனாதிபதிக்கும் கட்டுப்பட வேண்டும் நாடாளுமன்றத்துக்கும் பதில் கூற வேண்டும் என்ற நிலைமையே எமக்கு இன்று முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இத்தகைய நிலைமையில் இருந்து விடுபடவேண்டுமாக இருந்தால் அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

ஜப்பான் மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ள வேண்டும் இதன் மூலம் இந்த அரசமைப்பை மாற்றவும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு, பெரும்பான்மை கிடைக்கவும் ஆவன செய்ய வேண்டும் என்றார் அவர்.

இந்நிகழ்வில் சமூக அபிவிருத்தி அமைச்சர் சந்திரசேகரன், மாத்தறை மாவட்ட அரச அதிபர் ஆகியோரும் உரையாற்றினர்.

இக்கூட்டத்தில் மாத்தறை மாவட்ட பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச உயரதிகாரிகள் பொதுமக்கள் என பெருந்தொகையானவர்கள் கலந்துகொண்டனர். (ஒ-86)

# திரைப்படங்களும், ஊடக நிகழ்ச்சிகளும் எமது கலாசாரத்தைச் சீரழிக்கின்றன!

## கிளிநொச்சி மேலதிக அரசஅதிபர் கவலை

சண்டிலிப்பாய்,மே30

ஒரு நாளின் 24 மணிநேரமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் வானொலி நிகழ்ச்சிகளும் மக்களை சென்றடைகின்றன. அவற்றில் பெரும்பாலனவை தரமற்றவையாகவும், எமது இளம் சந்ததியினரை பாதிப்பனவாகவும் உள்ளன. இன்றைய திரைப்படங்களும் இளம் சமுதாயத்தை தவறான வழியில் இட்டுச் செல்வதற்கும் கலாசார சீரழிவுக்கும் காரணமாக அமைகின்றன.

சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச செயலகம் நடத்திய கலாசார விழாவின் முதலாம் நாள் நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலரும், உதவித்திட்டமிடல் பணிப்பாளருமான மு.பாலசிங்கம் தலைமை வகித்தார்.

மேலதிக அரச அதிபர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

எமது கலாசார விழுமியங்கள் பல வழிகளிலும் சீரழிந்து வருவதை இன்று காணக்கூடியதாக உள்ளது. இதனால் பெருமையும் சிறப்புகளும் மிக்க எமது கலை கலாசாரங்கள் நலிவடைந்து மறைந்து போகக்கூடிய நிலை ஏற்படக்கூடும்.

எமது தொன்மைமிக்க கலைகளுக்கு தனித்துவமானதொரு வரலாறு உண்டு. புனிதமான - தெய்வீகக்கலைகள் இவை.

இப்பிரதேசத்திலுள்ள மூத்த கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டியதும் அவசியம் என்றார் அவர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது -

மனித மனங்கள் பல்வேறு அழுத்தங்களினாலும், தாக்கங்களினாலும் பாதிக்கப்படுவதைத் தவிர்த்து அமைதி பெறுவதற்கு இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்று தெய்வ வழிபாடு மற்றது கலைகள். இயந்திரம்போல் செயற்படும் கஷ்டமான இன்றைய மனித வாழ்வுக்கு இதமளித்து புத்துணர்வை ஊட்டுபவை கலைகளே. எமது பைந்தமிழ் கலை கலாசாரங்களை அழிந்துபோக விடாமல் காப்பாற்றுவதற்கு கலாசார விழாக்கள் நடத்தப்படுவது பேருதவியாக அமைகின்றன என்றார் அவர்.

மற்றொரு கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் ஏ.யே. விக்டர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இன்று எமது மக்களுக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகம் ஏற்பட்டுள்ளன. இதனால் அந்நிய கலாசாரங்கள் இங்கு புகுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எமது மக்கள் கல்வியை உள்வாங்கலாம். ஆனால், அந்நிய கலாசாரங்களை உள்வாங்குவதில் எச்சரிக்கையாகவும், அவதானமாகவும் இருக்க வேண்டியது அவசியம். எமது கலைகள் உயிரைப் போன்றவை.

மக்கள் எமது பண்பாட்டை, கலை, கலாசாரத்தை சரிவர பேணி நடக்கும் போது இதுபோன்ற செயற்பாடுகளுக்கு இடமில்லாது போய்விடும் என்றார்.

இவ்விழாவில் ஆசியுரைகளை சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணியம்மன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ த.சி.பாலசண்முகநாதக்குருக்கள், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண.பிதா ஜேம்ஸ் சிங்கராயர் அடிகள் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

பட்டிமன்றம். நாடகம், பரதநாட்டியம் உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஒ-135)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், கேலன்காம குளத்தில் 10 பரப்புக் காணியுடன் கூடிய வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மேதர் இராஜசூரியர் (சனி காலை 10 - மாலை 3 வரை), "புஷ்பமகால்", கட்டுடை, மானிப்பாய். (18548)

இருபாலைச் சந்தியிலிருந்து பழைய வீதியில் 200m தூரத்தில், வீதி ஓரத்தில், இரு பரப்புடன் வீடு எல்லா வசதியுடனும் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும்: சி.கருணராசன், கோப்பாய் தெற்கு, கோப்பாய் (சிவா கடை அருகில்). (18551)

## FREEZER விற்பனைக்கு

புதிய Freezer (பிறீசர்) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: K.பாஸ்கரன், மானிப்பாய் (ஆஸ்பத்திரிக்கு முன்). (18542)

## அபூர்வ ஜோதிடம்

உடற் தாதுகளுக்கு புத்துயிர் வழங்கி தீராத நோய் குணப்படச் செய்யும் சித்தரின் புதுவித மருந்து, அதிர்ஷ்ட பலன் பெறல். சனி, ஞாயிறு 9.00 - 2.00 வரை. தொடர்பு: சேச் முன்லேன், முதலி கோவிலடி, கொக்குவில் மேற்கு. (18543)

## தவறிவிட்டது

நுணாவில், சாவகச்சேரி, வீரக்கொடியன் வீதியைச் சேர்ந்த மதுரநாயகம், முத்துப்பிள்ளை என்பவர்களது தேசிய அடையாள அட்டை (இல. 491282754V, 455841291V)களும் முக்கிய ஆவணங்களும் சிறு தொகைப் பணமும் தபாற் கட்டைச் சந்திக்கும் நுணாவில் சந்திக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் மானிப்பாயில் ஆஸ்பத்திரி முன்பாக உள்ள நல்லதம்பி போசனசாலையில் ஒப்படைத்துதவவும். (18525)

சி.தவசீலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 703153461V) 20-05-2003 அன்று பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி.தவசீலன், வட்டு.வடக்கு, சித்தன்கேணி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (18526)

## வெங்காயப் பயிரில் நோய்த் தாக்கம்

வலி.கிழக்கு பிரதேசத்தில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் ஒருவித தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால் விவசாயிகள் சிலர் நோய்த் தாக்கத்துக்குள்ளான வெங்காயப் பயிர்களைக் கைவிட்டு மாற்றுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-17)

## சாவகச்சேரி நகரப்பகுதி வீடுகளுக்கு மின்சாரம்

சாவகச்சேரி நகர்ப்பகுதி வீடுகளுக்கு நேற்று முன்தினம் தொடக்கம் இரவு நேரங்களில் மின்சாரம் வழங்கப்படுகிறது. தினமும் இரவு 7 மணி தொடக்கம 10 மணிவரை மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 3 மாதங்களாக ஜெனரேற்றர் மூலம் காலை10முதல் பி.ப.3 மணிவரை அரச திணைக்கள அலுவலகங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே.(எ-17)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்ய அல்லது நாளாந்தம் போய் வரக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு:

(18544) T.P.071 347564

## மணமகள் தேவை

- யாழ். உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த, சித்திரை 4ஆம் பாதம், கனடா பிரஜாவுரிமை உள்ள, கொம்பியூட்டர் இஞ்சினியருக்கு பெற்றோர் கேட்டை, ரேவதி, திருவோணம், பரணி, உத்தராடம், கார்த்திகை, பூராடம், பூரம், மூலம் ஆகிய நட்சத்திரங்களில் பாவக்கிரகம் 25இலும் குறைந்த, நற்குணமுள்ள, அழகான, A/L இற்கு கூட படித்த, மெல்லிய மண மகளைப் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகட்கு: 021-2263324 (18554)

---

# B.A. PART - I (யாழ்.)

## B.A. பேராதனை

## G.A.Q. புதிய பிரிவு

விரிவுரைகள்

ஆரம்பம்: 31.05.2003 (சனி)

விவரங்களுக்கு:

S.அருள்நங்கை (18552)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

---

# சென்றல் நேசிங் ஹோம்

350, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

**வழங்கும் சேவைகள்:**

- 24 மணிநேர வெளிநோயாளர், உள்நோயாளர் பகுதி
- 24 மணிநேர சத்திரசிகிச்சை சேவைகள்
- அடிப்படை ஆய்வுகூட சேவை 24 மணிநேரம்
- 'மெடிக்குயிக்', ஆய்வுகூட சேவைகள்

தினமும் காலை 8.00 - 10.00 மணிவரை

கணனி மூலம் பரிசோதனை விவரம் உடன் தரப்படும்

- நிபுணத்துவ ஆலோசனை சேவைகள்
- மகப்பேற்று / பெண்ணோயியல் - கிளினிக் - சத்திர சிகிச்சை சேவைகள்
- பல்வைத்திய சேவைகள்
- லப்பரஸ்கோப் சத்திர சிகிச்சை சேவைகள்
- 24 மணிநேர அம்புலன்ஸ் சேவை
- விவரங்களுக்கு: நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

இல. 021-2222263

(18522)

---

## புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 28.02.2003 இல் முடிவுற்ற கணக்காய்வு நடைபெறுவதால் மேற்படி சங்கத்தின் கிராமிய வங்கியின் வாடிக்கையாளர்கள் தங்களின் நிலையான, சேம வைப்புக்களையும், கடன் மீதிகளையும் 06.06.2003 இற்கு முன் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

-பொதுமுகாமையாளர்.

(C/28141)

---



## அன்னையின் பக்தகோடிகளே!

## உங்கள் கரம்பொன் வேளாங்கன்னி யாத்திரை ஸ்தலத்தில்

# திருவிழா

எதிர்வரும் ஆனிமாதம் 2ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆசியும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் பூசைப் பலியும் அதன் பின் சுரூப பவனியும் நடைபெறும். அன்னையின் பக்தர்களே தவறாது கலந்துகொள்ளுங்கள்.

கரம்பொன் பங்கு மக்களும்.

பங்குத் தந்தையும்.

விளம்பர. அனுசரணை:

அகில இலங்கை விநியோகஸ்தர்கள்

(C/28147) யாழ்ப்பாணம்.

---

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

பழைய மாணவர் சங்க

# ஆண்டுப் பொதுக்கூட்டம்- 2003

காலம்: 2003.06.01 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.30மணி

இடம்: வித்தியாலய 'L' மண்டபம்

சங்கத்தின் கடந்த கால செயற்பாடுகளை அறிந்து கொள்ளும் வகையிலும் எதிர்காலப் பணிகளை ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் இக்கூட்டத்தில் தவறாது பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,

(c/28145) பழைய மாணவர் சங்கம்

---

தொல்புரம் கிழக்கு, தொல்புரம் மேற்கு, மூளாய், பொன்னாலை, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் மத்தி, சுழிபுரம் கிழக்கு, பண்ணாகம், பணிப்புலம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்களின் ஆதரவில்

## வலிகாமம் மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும்

# கலைவிழா - 2003

தலைவர்: திரு. மு.சிவராசா
[உதவிப் பிரதேச செயலர் (நிர்வாகம்), சங்கானை]

காலம்: இன்று (30-05-2003) வெள்ளிக்கிழமை
நாளை (31-05-2003) சனிக்கிழமை
ஆகிய இரு தினங்கள் பிற்பகல் 4.00மணி (பு.நே.) ஆரம்பமாகும்.

இடம்: தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோயில்
திறந்த வெளி மோகன் அரங்கு

### இன்றைய நிகழ்வுகள

பிரதம விருந்தினர்:
திரு.செ.பத்மநாதன் (அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்)

கௌரவ விருந்தினர்:
திருமதி ப.திலகநாயகம்போல் (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திருமதி நாச்சியார் செல்வநாயகம் (முதுநிலை விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு.துரைசிங்கம் ரகு (முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)
Dr.பவானி சந்திரகுமார் (மகப்பேற்று நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)
Dr.எ.செல்வநாயகம் (பதிவுசெய்யப்பட்ட மருத்துவர், சங்கானை வைத்தியசாலை)
திரு.அன்பு (அரசியல்துறைப் பொறுப்பாளர், சங்கானை)

### நிகழ்ச்சி நிரல்


- மங்கள விளக்கேற்றல்
- மங்கள இசை: திரு.இ.சிவகுமார் குழுவினர்
- இறை வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து: திருமதி சாரதா பரஞ்சோதியின் மாணவிகள்
- ஆசியுரை: சிவஸ்ரீ சு.சுந்தரராஜக் குருக்கள் (பிரதம குரு, வழக்கம்பரை அம்மன் கோயில்)
- வரவேற்பு நடனம்: செல்வி ப.பொன்மதி (நுண்கலைமாணி) அவர்களின் மாணவிகள்
- வரவேற்புரை: திரு.ம.ஸ்ரீமுருகவேள் (கி.அ.,தொல்புரம்கிழக்கு)
- சிறுவர் நாட்டிய விருந்து: பாரதி கலாமன்ற முன்பள்ளி, சுழிபுரம் மேற்கு
- இசைக்கச்சேரி: செல்வி த.பங்கயற்செல்வி குழுவினர் (ஆசிரியை, விக்ரோறியாக் கல்லூரி)
- "நிருத்தியாஞ்சலி" நாட்டியவிருந்து: நுண்கலைமாணி செல்வி பொன்மதி பரமசிவனின்மாணவிகள்வழங்கும் ❖ புஷ்பாஞ்சலி ❖ கீர்த்தனை ❖ கிராமிய நடனம்
- தலைமையுரை
- சிறப்பு விருந்தினர் உரை
- கௌரவ விருந்தினர் உரை
- கலைஞர்கள் கௌரவிப்பு
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை: திரு.இ.ஸ்ரீரஞ்சன் (கி.அ.,தொல்புரம் மேற்கு)
- வாத்திய விருந்து: கலை கலாசார, சமூக மேம்பாட்டு நிறுவனம், தொல்புரம் கிழக்கு
- இசைநாடகம்: "பக்தநந்தனார்" திரு.இ.கிருஷ்ணதுரையின் நெறியாள்கையில் (பண்ணாகம்)
- இசைக்கச்சேரி: சங்கீதபூஷணம் வை.உருத்திரன் குழுவினர் (பொன்னாலை)
- நகைச்சுவை நாடகம்: "தாலிபு தங்கம்மா", சண்டிலிப்பாய் கி.அழுவலர் குழு.
- நாட்டுக்கூத்து: "இராம இராவண யுத்தம்"கலைவாணி நாடகமன்றம் (தொல்புரம்மேற்கு)
- "அரிச்சந்திர மயானகாண்டம்" மா.குலசேகரம் குழுவினர் (சுழிபுரம் கிழக்கு)

விளம்பர அன்பளிப்பு : அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம். சுழிபுரம் மேற்கு.


அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதே [illegible] செயலகம், சங்கானை. (C/28136) கலாசாரப் பேரவை,வலிகாமம் மேற்கு.

---

உலகப் புகழ் பெற்ற L.G தொலைக்காட்சிப் பெட்டிகள் Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA

TEL: 021-222-5766

(C-28105)

## புற்றுநோய் சிகிச்சை

யாழ்ப்பாணம்,மே30

கொழும்பில் இருந்து வருகை தரவுள்ள புற்றுநோய் வைத்திய நிபுணர் அடுத்த மாதம் 3 ஆம், 4ஆம் திகதிகளில் தெல்லிப்பழை புற்று நோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை வழங்கவுள்ளார் என யாழ்பதில் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-ரி)

## நயினை உற்சவ கலந்துரையாடல்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்திற்கான முன்னேற்பாட்டு வேலைகளை மேற்கொள்வது தொடர்பாக நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் திருமதி பதிலக நாயகம் போல், வேலணை பிரதேச செயலர், கடற்படை, பொலீஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-8)

## இந்திய அமைச்சர் இலங்கை வருகிறார்

கொழும்பு,மே30

இந்திய எரிபொருள்துறை அமைச்சர் ராம்நாயக் இலங்கைக்கு விஜயம மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை இலங்கையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே இவர் வரவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

திருகோணமலை சீனன்குடாவில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளை நவீனமயப்படுத்துவதன் ஆரம்ப நிகழ்வில் இவர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் தகான விமலசேன தெரிவித்தார். (ஒ-ரி)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

புளியங்கூடல் சரவணை, கரம்பொன மற்றும் நாரந்தனை, ஊர்காவற்றுறை பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப் பட்டுள்ளது.

- இவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் அப்பிரதேசத்தில் வளர்க்கப்படும் கால்நடைகளைக் கடித்துக் குதறும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன என்றும் -

இதனால் கால்நடை வளர்ப்போர் கால்நடைகளை வளர்ப்பது குறித்து அச்சம் கொண்டுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

எனவே, இது குறித்து சம்பந்தப் பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-ரி)


நியூட்டன் - யாழ்நகர்
ஆரியகுளம் சந்தி

G.A.Q., B.A. பேராதனை
B.A. Part - I
G.A.Q - 2003, 2004 (யாழ்.)
தமிழ் - க.தர்மராஜா
ஆரம்பம்: - 31-05-03
8.00 a.m.

Basic English
எழுத, பேச, வாசிக்க
அடிப்படையில் இருந்து
கற்பிக்கப்படும்.
ஆரம்பம் - 31-05-03
(18563) 8.00 a.m.



ஒரு வியப்பூட்டும் தகவல் என்னிடம் உள்ளது!! செலான் வங்கி எனக்கு உண்மையான...

9% போனஸ் வட்டியை வழங்குகிறது.

30 நாட்களில் 7.5% 90 நாட்களில்



மிலேனியம் 30
30 நாள் நிலையான வைப்பு

நான் செலான் வங்கியுடன் மிலேனியம் 30 நிரந்தர வைப்புக் கணக்கொன்றை 3 தொடர்ச்சியான மாதங்களுக்கு வைத்திருப்பின் வருடமொன்றுக்கு 1.5% வீதம் போனஸ் வட்டி மூன்றாம் மாத முடிவில் கிடைக்கும்.

இச்சலுகை மே மாதம் 26ம் திகதி முதல் ஜூன் மாதம் 26ம் திகதிக்குள் கணக்கொன்றை ஆரம்பித்தால் அல்லது பழைய கணக்கை புதுப்பித்தால் மட்டுமே.

நடைமுறை மிலேனியம் 30 - வட்டி வீதம் வருடமொன்றுக்கு 7.5% (வருடாந்தம் விளைவு வீதம் 7.76%)

3ம் மாத முடிவில் வட்டி வீதம் வருடமொன்றுக்கு 9% (வருடாந்த விளைவு வீதம் 9.38%)

மேலதிக விபரங்களுக்கு நாடெங்கும் பரந்துள்ள ஏதாவது செலான் வங்கி கிளையை நாடுங்கள் தொலைபேசி: 021-2223755, 021-2223047

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

GRACE



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ். மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி. இல.-021-222-2567
(27865)



சனிக்கிழமை அதிர்ஷ்டம்





உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2666188 இருந்து
2683252 வரை
சீட்டிழுப்பு இல. 1404
திகதி 28.05.2003

வெற்றி எண்கள்
11 24 36 37 55
போனஸ் எண்
19

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 107 | 10,000/- | 1,070,000/- |
| 3 | 5,318 | 500/- | 2,659,500/- |
| 2 | 89,754 | 20/- | 1,795,080/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 11ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 110,091 | 10/- | 1,100,910/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,425,490/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 1,500,000/-

தொடர் இல. 3664286க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 மே 31ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2680323-5-49
2672231-7-25
2670067-8-92
2676381-4-48
2677292-0-58

PHOENIX OBM



பேருரை

தென் ஆபிரிக்க சமாதானப் பயணத்தில் இடைக்கால அரசியல் யாப்பு

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

வழங்குபவர் : கலாநிதி லீயோன் வெசல்ஸ்

இவர் 30 வருடகால அரசியல் அனுபவமுடையவர். குறிப்பாக முரண்பாடு தீர்த்தல், சமாதானம் போன்ற விடயங்களில் அனுபவமும் அறிவு வளமும் நிறைந்தவர்.

தென் ஆபிரிக்க சமாதானப் பயணத்தின்போது இடைக்கால அரசியல் யாப்புச் சபையின் பிரதித் தலைவராக விளங்கியவர்.

தற்போது, 1999ஆம் ஆண்டிலிருந்து தென் ஆபிரிக்காவின் மனித உரிமை ஆணைக்குழுத் தலைவராகக் கடமையாற்றிவருகிறார்.

அந்நாட்டின் சமாதானத்திற்கு இவர் வழங்கிய பங்களிப்புக்காக மட்டுமல்ல இவர் மதிக்கப்படுவது மத்திய கிழக்கு, வட அயர்லாந்து போன்ற நாடுகளிலும் சமாதானப் பணிகளில் ஈடுபட்டு அனுசரணையாளராகவும் செயற்பட்டுள்ளார்.

பேருரை நேரம் : காலை 10 மணி
காலம் : நாளை(31.05.2003) சனிக்கிழமை
இடம் : கேட்போர் கூடம் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அனுசரணையாளர் :
வண. பிதா A.I. பேனாட்,
நீதி சமாதான ஆணைக்குழு,
யாழ். கத் – மறைமாவட்டம்.

ஏற்பாட்டாளர்கள்:
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
122 - பிளவர் வீதி, கொழும்பு- 07


(சி-28154)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## 30.05.2003

## செல்வன் கண்ணதாசன் விதுஷ்

*HAPPY BIRTHDAY*



*அளவெட்டியைச் சேர்ந்த*
**கண்ணதாசன்**
*அச்சுவேலியைச் சேர்ந்த*
**தயாபரி** *தம்பதிகளின்*
செல்வப் புதல்வன்

## செல்வன் விதுஷ்

தனது முதலாவது பிறந்ததினத்தை பிரான்ஸில் உள்ள தனது இல்லத்தில் இன்று (30.05.2003) வெள்ளிக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணா ஹரீஷ், சுவிஸிலுள்ள மாமா, அத்தை, அத்தான் சாயிதன், அச்சுவேலியில் உள்ள அம்மப்பா, சித்தி, சித்தப்பா, தங்கை நிவேதிகா, பாட்டப்பப்பா, சித்திமார், பெரியம்மாமார், அம்மம்மாமார், அளவெட்டியில் உள்ள அப்பப்பா, அப்பம்மா மற்றும் உறவுகள் பிரான்ஸில் உள்ள குகதாசன் சித்தப்பா, சுகுணதாசன் சித்தப்பா குடும்பத்தினர், லண்டனில் உள்ள விமலதாசன் சித்தப்பா குடும்பத்தினர், கனடாவில் உள்ள லோகதாசன் சித்தப்பா, மதி அத்தை குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் செல்வன் **விதுஷ்** காட்டுமலைக் கந்தன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*நாவற்காடு,*
*அச்சுவேலி.*

(சி-28146)

**சி.தங்கவேல்**
(அம்மப்பா).

# சேவை நலன் பாராட்டு



திருமதி
## செல்வராணி ஜெகநாதராசா

*இருபதாண்டுகள் எமதினிய பள்ளியில்*
*இன்முகம் மாறாது கடமையாற்றியே*
*இறும்பூதெய்தி நிற்கும்*
*எமதினிய ஆசிரியை செல்வராணியை*
*இன்னும் பலகாலம் நீடூழி வாழ்ந்து*
*இறையருள் பெற வேண்டுகின்றோம்.*

**யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.** (18559) **- பாடசாலைச் சமூகம்.**



## அச்சுவேலி பத்தமேனி

*அருள்மிகு தீர்த்தாங்குளம் பிள்ளையார் தேவஸ்தானம்*

# தீர்த்தோற்சவ விஞ்ஞாபனம் ~ 2003

**விநாயகர் அடியார்களே!**

நிகழும் சுபானு வருடம் வைகாசி மாதம் 16ஆம் நாள் 30.05.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் தீர்த்தாங்குளப் பிள்ளையாருக்கு தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. அத்தருணம் அடியார்கள் தீர்த்தோற்சவ வைபவத்திற்கு வருகைதந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| காலை 7.00 மணி | – | அபிஷேகம் |
| காலை 7.30 மணி | – | மூலஸ்தானப் பூசை |
| காலை 7.45 மணி | – | தம்ப பூசை |
| காலை 8.30 மணி | – | சூர்னோற்சவம் |
| காலை 9.00 மணி | – | வசந்தமண்டபப் பூசை |
| காலை 10.00 மணி | – | தீர்த்தோற்சவம் (தேவஸ்தானக் கேணியில்) |
| காலை 11.00 மணி | – | மகாயாக கும்பாபிஷேகம் |
| | | **பிற்பகல் திருவிழா** |
| மாலை 4.00 மணி | – | மூலஸ்தானப் பூசை |
| மாலை 4.30 மணி | – | வசந்தமண்டபப் பூசை |
| மாலை 5.00 மணி | – | அவரோகணம் (கொடியிறக்கம்) |
| மாலை 6.00 மணி | – | மௌனத்திருவிழா |

*மங்கள இசை:*
**திரு.வி.ஏ. இராமையாவின் புதல்வர்கள்** (ஆவரங்கால்)
**திரு. L.S. ஜெகநாதன் குழுவினர்** (உடுப்பிட்டி)

சந்திரா தொலைத்தொடர்பகம்
உடுப்பிட்டி.
**T.P.: 070 212781, 212714, 021 226 3524**

10ஆம் திருவிழா தீர்த்தோற்சவம்
உபயகாரர்கள் சார்பில்
(18558) (திரு.செ.சந்திரமூர்த்தி).

# SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது

be sharp

# யாழ்ப்பாணத்தில்



SHARP

- உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
- யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப் பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
- நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics *Live it up*

BROWNS GROUP BG ESTD 1875

**Browns** Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

## புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம் பதி கந்தசுவாமி கோவில்

### விசேட கூட்டம் 01.06.2003

05.06.2003இல் நடைபெறவிருக்கும் வருடாந்த மஹோற்சவம் பற்றிய மேற்படி கூட்டம் 01.06.2003 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.த.தவராசா அவர்கள் தலைமையில் நடைபெறும். பரிபாலன சபை அங்கத்தவர்கள், திருவிழா உபயகாரர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

புங்குடுதீவு. (18568) -ஆலய பரிபாலன சபையினர்.

## வேலையாள்கள் தேவை

1. உணவு பரிமாறுவோர் (சப்ளையர்ஸ்).
2. சமையல் வேலையாள்கள்.
3. இடியப்ப வேலையாள்கள்.
4. சமையல் உதவியாளர்கள்.
5. ரீ மேக்கர்.
6. உழுந்து அரைப்பவர்கள்.
7. பாதுகாப்பு உத்தியோகத்தர்.

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு வேலை ஆள்கள் தேவை. தகுதி உடையோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும். தங்குமிட வசதி செய்துதரப்படும்.

36,38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் (18546) ரெலிபோன்: 021 222 2373, 0777 146844

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தைச் சேர்ந்த
திருமதி வரதலஷ்மி சோமசூரியசிங்கத்தின்
அன்புத் தாயார்
**திருமதி துரைராஜா பார்வதிப்பிள்ளை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வேதபாராயண சனசமூக நிலையம், கோண்டாவில் மேற்கு.
(18560)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**சிசிலியா பரிமளம் ஆசீர்வாதம்**
(தனபாக்கியம்)
அன்னை மடியில் : 08.03.1928
ஆண்டவன் மடியில் : 30.04.2003

*அன்னையின் பிறப்பிடமாய் பாசத்தில் ஊதிவிடமாய்*
*நட்பில் இலக்கணமாய் வாழ்ந்த எம் மம்மி*
*முத்த மகளை இறைபணிக்கு அர்ப்பணித்து*
*மற்றையோர்க்கும் நல்வாழ்வைத் தேடித்தந்து*
*மாதாவைப் பார்க்கப்போறேன் என்று கூறி*
*தொலைதூரப் பயணம் போனீர்களா?*
*முப்பத்தொரு நாள்களல்ல எம் உயிர் உள்ளளவும்*
*நாம் உங்களை மறவோம் மம்மி.*

அன்னாரது இறுதிச்சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம். இவரின் ஆத்மசாந்திக்காக புனித லூர்து அன்னை ஆலயத்தில் இன்று (30.05.2003) வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*டொயிட்டி, இளவாலை.* **பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.** (C/28156)

## மின்சார சபைக்கு பெரும் நஷ்டம்

தென்னிலங்கையில் சமீபத்தில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தத்தால் மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்புக்களை இலங்கை மின்சார சபையினால் தனித்து ஈடுசெய்ய முடியாது என அதன் தலைவர் கூறியுள்ளார்.

பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளதாகவும்- அதனை ஈடுசெய்யும் பொருட்டு அரசினதும் வெளிநாட்டினதும் உதவிகளை இலங்கை மின்சார சபை கோரவுள்ளதாகவும் - அவர் கூறியுள்ளார். தென் மாகாணத்தில் மிகவும் மோசமான இழப்புக்களை இலங்கை மின்சார சபை சந்தித்துள்ளது.

## வழிகாட்டல் வகுப்புகள்

எழுதுவினைஞர், கணக்குப் பதிவாளர் பதவி உயர்வுப் பரீட்சைக்கான முன்னோடி வழிகாட்டல் வகுப்பு நாளை மு.ப.10 மணிக்கு யாழ்மத்தியகல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிதிப்பிரமாணங்கள், தாபனக் கோவைகள் தொடர்பான விரிவுரைகள் இடம்பெறும். இந்த வழிகாட்டல் வகுப்புகள் தொடர்ந்து சனி, ஞாயிறு, பொது விடுமுறை ஆகிய தினங்களில் இடம்பெறும். (ஐ-3)

### தவறிவிட்டது

27.05.2003 அன்றைய தினம் புளியங்குளத்தில் இருந்து முகமாலை நோக்கி வந்த பேருந்தில் எனது கறுப்பு நிற பயணப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-
க.ஜெயசந்தர்.
மதுவரி அலுவலகம்
இல.63/3,
கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
T.P.:- 021 - 222 - 3451 (18564)


ராஜா யாழ்ப்பாணம்
மூன்றாவது வாரம்
விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்

புதிய கீதை
காட்சிகள் :10.30, 2.30, 6.30,
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(C/27626)

லிபேட்டி அச்சுவேலி
ஸ்ரீகாந்த், பூமிகா, விவேக், ரகுவரன், ராதிகா நடித்த

ஏப்ரல் மாதத்தில்? ரோஜாக் கூட்டம்
காட்சிகள் தினசரி 11.00, 3.00, 7.00 (பி.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, நாகேஸ், வீ.கே. இராமசாமி நடித்த
இரகசியப் பொலிஸ் 115
காட்சி நேரம்: 11.00, 2.00, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
CASTAWAY

நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், சுகன்யா, ரகுவரன் நடித்த
கேப்டன்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேட காட்சி 7.00 (பி.நே.)
அடுத்த வெளியீடு மாறன்
(18561)


## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தெரிவு

மேற்படி சங்கத்தில் 03-05-2003இல் சகல கிளைகளுக்கான கிளைக்குழுத் தெரிவு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பின்வரும் கிளைகளுக்கான கிளைக்குழுத் தெரிவு நிறைவெண் இன்மையால் நடைபெறவில்லை. இதன்பொருட்டு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கும் முகமாக குறித்த கிளைகளுக்கான கிளைக்குழுத்தெரிவு பின்வரும் விபரத்திற்கமைய நடைபெறும்.

**கிளைக்குழு தெரிவு நடைபெறும் திகதி, நேரம் 14-06-2003 சனி மு.ப. 10.00**

| கிளை இல. | | கிளைபொதுச்சபை நடைபெறும் இடம் | | |
|---|---|---|---|---|
| 1. 10 பொன்னாலை | - | கிளை 12 தொல்புரம் கிளைக்கட்டடம் | - | தொல்புரம் |
| 2. 19 வட்டுமூளாய் | - | கிளை 19இன் கிளைக்கட்டடம் | - | வட்டுமூளாய் |
| 3. 28 துணவி | - | கிளை 28இன் கிளைக்கட்டடம் | - | சங்கரத்தைதுணவி |
| 4. 29 சங்கரத்தைதுணவி | - | கிளை 29இன் கிளைக்கட்டடம் | - | சங்கரத்தைதுணவி |

### நிகழ்ச்சி நிரல்

1. மௌன இறை வணக்கம்
2. தலைமையுரை - தவிசாளர்
3. கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு
4. நன்றியுரை

குறிப்பு:- மேற்படி அறிவித்தலை சம்பந்தப்பட்ட கிளைப் பொதுச்சபை தகுதியுள்ள உறுப்பினர்கள் தமது சொந்த அறிவித்தலாக ஏற்றுக்கொள்ளவும். தனித்தனி அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.

கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை,
357, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
29-05-2003

திரு.செ.கனகசபாபதி
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
(C/28151)

## துயர் பகிர்வு

கொக்குவிலைச் சேர்ந்த
**கந்தையா சோமசுந்தரம்**
(முன்னாள் தலைவர், கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்)
அவர்கள் காலமான செய்தி கேட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில். (C/28159)
நிர்வாக சபை,
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா இரத்தினம்

மானிப்பாய், சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இரத்தினம் 29.05.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும் அமரர் துரைசிங்கம் மற்றும் ஆறுமுகராசா, அமரர் பஞ்சலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம் (ஜேர்மனி), அமரர் மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் பூபதி, அன்னலட்சுமி, சுசிலாதேவி, ஜெயவதனா, தங்கராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(30.05.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இருபாலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி மத்தி, கைதடி. (18574)
தகவல்: சி.ஆறுமுகராசா (மகன்)

## அருளம்பலம் செல்லம்மா

காரைநகர், நடுத்தெருவை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான அருளம்பலம் செல்லம்மா (சின்னக்குஞ்சரின் மனைவி) அவர்கள் 29.05.2003 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலத்தின் மனைவியும், யோகமலர், பஞ்சாச்சரம், சரோஜா, யோகேந்திரன், தர்மலிங்கம் (லண்டன்) சிவராசா, கணேசலிங்கம்(முன்னாள் AMARI WILLS உரிமையாளரும், SRI DISTRIBUTORS OF COCA - COLA, WELLAWATTE) ஆகியோரின் தாயாரும் நடராஜா, அருள்சோதி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், மங்களவாணி, அன்னலட்சுமி, துவாரகாதேவி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜயரட்ண மலர்சாலையில் இன்று (30.05.2003) வெள்ளிக்கிழமை வைக்கப்பட்டு நாளை (31.05.2003) சனிக்கிழமை முற்பகல் 12.மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*C- 6, சமகிபுர தொடர்மாடி,*
*கிராண்பாஸ், கொழும்பு -14*
T.P.:-071 344419
072 175080 (18573)
தகவல்:- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## திருமதி கந்தசாமி செல்லம்மா

பண்டாரி அம்மன் கோவிலடி, தும்பசிட்டி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி செல்லம்மா 27.05.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் பாலச்சந்திரன், பரிபூரணம், சரஸ்வதி, தங்கராசா(லண்டன்), ஈஸ்வரி, தெய்வநாயகி, பாலகிருஷ்ணன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகாமசுந்தரி ஆறுமுகம், வரதராஜா, காலஞ்சென்ற குணம் மற்றும் இந்திராணி, நிர்மலா(கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும் உதயசூரியன் ஜெயக்குமாரி, குணசசிதரன் ஜெயலலிதா, சிவடரன் விஜயலலிதா(கனடா), பிரபாகரன்(சுவீஸ்), குலேந்திரன் சுமதி, பாஸ்கரன் வளர்மதி, ஜனார்தன் சுகந்தி, சுதாகர்(கனடா), பிரபாகர்(சுவீஸ்), யோகசுந்தரி, ரஜனிசிறீதரன், சுகந்தன், சுதாஷன், சுகிர்தன், பிரிந்தன் ஆகியோரின் பேர்த்தியாரும் அபிரேசன், நிரோஜன், விதுர்ஷன், துவாரகன், சர்மிளா, ரேகா, சாதனா, நிதர்ஷன், சந்தியா, கௌதமன், பிரியந், பிருந்தா, செளமியா, துர்ச்சயன், கீர்தனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(30.05.2003) வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கடற்கரை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பசிட்டி, பருத்தித்துறை.* (18566)
தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி செல்லையா ஞானேஸ்வரி

யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி செல்லையா ஞானேஸ்வரி 29.05.03 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.* (18562)
தகவல்:- S.தங்கராஜா (மருமகன்)

## இராமநாதன் ஸ்ரீஸ்கந்தநாதன் (காந்தன்)

திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதி, முடமாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இராமநாதன் ஸ்ரீஸ்கந்தநாதன் (காந்தன்) 25.05.2003 ஞாயிறன்று கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் குணபாக்கியத்தின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் சிதம்பரத்தின் அன்பு மருமகனும் மோகனாம்பிகையின் அன்புக் கணவரும் பிரணவன், ரம்மியா ஆகியோரின் பிரியமிகு தந்தையும் பிரேமநாதன், சுசிலாதேவி, ரவீந்திரநாதன், ஜெயவதனி, ஜெயபவானி, மாலினி, ஸ்ரீரங்கநாதன், ஜெயந்தினி, சுரேஸ் ஆகியோரின் சகோதரனும் சுதா, செல்வம், ரதி, குகன், கலாதரன், சுகிந்தன், உஷா, பீற்றர் செல்வா, சுங்கா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை(31.05.2003) சனிக்கிழமை காலை 8மணிக்கு கனடாவில் நடைபெறும். அன்று சனிக்கிழமை அன்னாரின் பிரிவுத் துயரை அவரின் 164, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியில் உறவுகள் பங்குகொண்டு துயர் பகிர்வர்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**உறவினர்கள்,**
*முடமாவடி, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.* (C/28155)
தகவல்: செ.சிவலிங்கம், செல்வராஜா அவனியூ, அம்மன் வீதி, திருநெல்வேலி.

### அடுத்த மாத நடுப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள

# மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு பொது அமைப்புகள் பலவும் முழு ஆதரவு

யாழ்ப்பாணம்,மே30

தமிழ் மக்களினது இயல்பு வாழ்க்கையை உறுதி செய்யுமாறு கோரி அடுத்தமாத நடுப்பகுதியில் இடம் பெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு குடா நாட்டின் பொதுநிறுவனங்கள் அனைத்தும் ஆதரவு தெரிவித்துள்ளன.

நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் ப.பகீரதன் தலைமையில் இடம்பெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பின் போதே பொது அமைப்புகள் பலவற்றின் பிரதிநிதிகள் இதனைத்தெரிவித்தனர். யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் மற்றும் குடா நாட்டின் பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:-

எமது மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதி செய்யுமாறு கோரி இப்போராட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது. குறிப்பாக இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர வேண்டும் என்பதுவும் அவர்கள் விவசாயம், மீன்பிடி உட்பட தமது தொழில் நடவடிக்கைகளை எந்தவித நெருக்கு வாரங்களற்ற நிலையில் மேற்கொள்ள வேண்டும் என்பதும் இந்த எழுச்சிப் போராட்டத்தின் மூலம் வலியுறுத்தப்படும்.

இந்த எழுச்சிப் போராட்டம் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஈடுபடுவர். இறுதிநாள் எழுச்சி நிகழ்வுகள் எதிர் வரும் 24 ஆம் திகதி யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் இடம்பெறும். இறுதி நாள் எழுச்சி நிகழவுகளில் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்களைத் திரட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-9-12)

---

## நவக்கிரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்திடமும் பிரதேச செயலரிடமும் கையளித்தனர்.

பின்னர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வாகனத்தில் அங்கிருந்து புறப்பட்டு யாழ்நகரிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்துக்கும், செஞ்சிலுவை சர்வதேசக் குழு பணிமனைக்கும் சென்று மகஜர்களைக் கையளித்தனர்.

நேற்றைய மறியல் போராட்டத்தின் போது கலகம் அடக்கும் பொலஸாரும், இராணுவத்தினரும் அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தனர். (ஐ-180-11-31)

---

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலுவைச் சங்க வாகனத்தின் மூலம் பொதாது வைத்தியசாலையில் சேர்க கப்பட்டனர்.இச்சம்பவம் தொடர் பாக இதுவரை எவரும் கைதுசெய் யப்படவில்லை. (ஐ)

---

## கலவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொறியில் பயணித்தார்.

லொறி வீதித்திருப்பம் ஒன்றில் திரும்பியது. அப்போது கலவை இயந்திரம் லொறியில் இருந்து தவறி வீதியில் விழுந்தது. அவ்வேளை அந்த இளைஞரும் தவறி விழுந்தார். அவர் கலவை இயந்திரத்தின் அடியில் சிக்கி உயிரிழந்தார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பாக மரண விசாரணையை மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை அவரது தந்தையிடம் ஒப்படைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-3-15)

---

## அதிகாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கும் கருத்துக்கள் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுகளை சபைத் தலைவர் நிறைவேற்றவேண்டும். ஜனாதிபதியின் கடிதம் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அமைச்சின் ஊடாக வரும்போதுதான் உத்தரவு நிறைவேற்றப்படும் என்று சபைத் தலைவர் தெரிவித்தாரென ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவரது கருத்து இன்னும் உத்தியோகபூர்வமாக ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு அறிவிக்கப்படும் பட்சத்தில் அதன் பின் ஜனாதிபதி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஐ)

---

## லொறியின்...

கிடுகு ஏற்றிவந்த லொறி வீதியோரமாக விலகியபோது கிடுகுக்கட்டுக்களைச் சேர்த்துப் பிணைத்திருந்த கயிறு அறுந்ததால் மேலே அமர்ந்திருந்த ஐவரும் தூக்கி வீசப்பட்டனா என்றும் கூறப்படுகிறது. அவ்வாறு தூக்கி வீசப்பட்டவர்களில் ஒருவரே உயிரிழந்தார். ஏனைய நால்வரும் காயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வாகனம் மூலம் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். உயிரிழந்தவரின் சடலமும் வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றதால் தமிழீழக் காவல்துறையினர் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு, கிடுகு ஏற்றிவந்த வாகனத்தின் சாரதியைக் கைதுசெய்தனர்.

---

## நெகிழ்வுப் போக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

பிரதமர் தமது உரையில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் சில, அரசினால் செய்யக்கூடிய - எட்டக்கூடிய - நிலையில் இல்லை.

நாட்டில் உள்ள சட்ட வரையறைக்குள்தான் அரசு செயற்படமுடியும்.

எனவே, புலிகள் சற்று விட்டுக் கொடுப்புடன் செயற்பட முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் தமது தனி நாட்டுக் கோரிக்கையை விட்டுக் கொடுத்து அரசுடன் நடந்த பேச்சுக்களில் அதை உறுதிப்படுத்தினார்கள். இதனாலேயே புலிகளுடன் தொடர்ந்து பேச்சுக்களை மேற்கொள்வது இலகுவாக இருந்தது.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகியவை தொடர்பான பணிகளை முன்னெடுப்பதற்கு - சட்டத்துக்கு அமைவாக - கட்டமைப்பு ஒன்றை நாம் உருவாக்கியுள்ளோம். அது யுத்தத்தால் அதிகம் பாதிப்புற்ற மக்களின் கருத்துக்களையும் எதிர்பார்ப்புகளையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாகப் புலிகள் சலிப்படைந்ததில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஒரு சிறிய நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்குக் கூட ஏற்பட்ட காலதாமதம் குறித்து நாமும் விரக்தியடைந்துள்ளோம்.

கடந்த 16 மாதங்களில் ஒவ்வொரு நாளும் ஏற்படுத்தப்பட்ட நன்மைகளின் விளைவு மேலும் அதிகமானவற்றைக் கோருவதற்கு மக்களைத் தூண்டுகின்றது.

நிறைவேற்றி முடிக்காதவை ஒருபுறம் இவற்றுக்கு மத்தியில் எதிர்பார்ப்புகளையும் எதிர்கொள்வது எப்போதும் கஷ்டமாகும்.

இலகுவில் செயற்படுத்த - நிறைவேற்ற - முடியாதவை இன்று வலியுறுத்தப்படுகின்றன. அதனால், ஒரு முட்டுக் கட்டை நிலையை அடைந்துள்ளோம்.

எனவே, ஏற்பட்டுள்ள சிக்கல்களை விடுதலைப் புலிகள் சற்றுப் புரிந்து கொள்ளவேண்டும். வலியுறுத்துவது ஒன்று. ஆனால், அதை நிறைவேற்றுவது இலகுவாக இருப்பதில்லை. பொறுப்புள்ள அரசு என்ற வகையில் நாம் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே செயற்படவேண்டும் - என்றார் பிரதமர்.


யாழ்.மக்களின் நலன் கருதி

EXPO AVIATION

LION AIR

SERENDIB EXPRESS

ஆகிய மூன்று விமானங்களுக்குமான

யாழ். – கொழும்பு | கொழும்பு – யாழ்.

விமான ரிக்கெற்றுக்களை

ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள.....

எம்மிடம் பதிவுசெய்யப்படும் விமான டிக்கெட்டுக்கள் உங்கள் முகவரிக்கு உடனேயே அனுப்பிவைக்கப்படும்.

ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி

95, பருத்தித்துறை வீதி (ஆரிய குளம் முன்பாக),

யாழ்ப்பாணம். 021 - 222 6144

24 மணி நேர சேவைக்கு 077 - 6038505

(18553)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 14 - 10 - 1919



அம்மன் நிழலில் 21 - 05 - 2003

### திருமதி நடராசாக்குருக்கள் வாலாம்பிகைஅம்மா

பண்பும் பக்தியும் நிறைந்து வாழ்ந்து எல்லாம்வல்ல வீரமாகாளீ அம்மன் பாதமலரை அடைந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்கள், அஞ்சலி செலுத்தியவர்கள் அனுதாபந் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் கல்லெடுப்பு 31.05.2003 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.01.06.2003 ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எமது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

140,வீரமாகாளி அம்மன் கோயில்,
நல்லூர்.(நரேன் வீடியோ)

(c/12826)

-குடும்பத்தினர்.


SUBRA(14) சித்தன்கேணி

SPOKEN ENGLISH AND GRAMMAR

BY: BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்:

03.06.2003 Tus.காலை8.00

(வழமையான வகுப்புகள் Tus.Thu.8.00)

பேச்சுச் சிங்களம்

திரு.லீலாக்கிருஷ்ணன்

புதியபிரிவு 03.06.2003(Thu.9.00)

(வழமையான வகுப்புகள் Tus.Thu.9.00-10.00)

(C/28124)

UNIVAC

College of Computer Information Technology

COMPUTER COURSES

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 02.06.2003

மாவடி வீதி, சித்தன்கேணி.

இயக்குநா, UNIVAC

(18489)

SPOKEN ENGLISH WITH GRAMMAR

BY: S.B.SASI

ஆரம்பம்: 01.06.2003

ஞாயிறு 3.00 பி.ப.

NEW HARY'S INSTITUTE

மாவடி வீத', சித்தன்கேண

(18490)

BRIGHTMAN

பிறவுண்வீதி, திராவிடம், யாழ்நகர்.

A/L 2004

பௌதிகம்

அலகுரீதியான மீட்டல் வினாவிடை

BY:ஜெயசீலன்

ஆரம்பம்:

31-05-2003 Sat.7.30a.m.

(18471)


# மரண அறிவித்தல்கள்

### வீரவாகு முருகையா

தாவடியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு முருகையா நேற்று (29.5.2003) காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் கலாதேவி, ராதாதேவி, ஜசோதரன்(Quantity Surveyor, DOHA-Qatar) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிமலன்(ஆசிரியர், யாழ்.இந்து கல்லூரி), வரதராஜா(அபுதாபி) ஆகியோரின் மாமனாரும் ஜனலக்ஷன், பிருந்தாவன், சஜித்திரா ஆகியோரின் பேரனும் பூரணம், பூமணி, ஈஸ்வரி, குமாரசாமி, செல்லத்துரை மற்றும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, இராசமணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ச.நிமலன *(மருமகன்)*

(28162)

### திருமதி நாகமணி தங்கச்சியம்மா

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி தங்கச்சியம்மா 25.05.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி(சூசை)(இளைப்பாறிய புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும் விக்னேஸ்வரன்(டோகா), விஜயகுமார்(ஜேர்மன்), விமலநாதன்(ஜேர்மன்), தாசன், வதனா, கமலா, கலா(ஹொலண்ட்), விஜி(நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றஞ்சா, சாந்தி(ஜேர்மன்), சத்தியா(ஜேர்மன்), குணசேகரம், பிரபா(மலேஷியா), ரவி(ஹொலண்ட்), ரவி(நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் துரைசிங்கம், கந்தசாமி, நல்லம்மா, முத்தம்மா, காலஞ்சென்ற வேலாயுதம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2003) சனிக்கிழமை முற்பகல் 11மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை இந்து மயானதத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:-*
*சங்கானை,*
*சிவப்பிரகாசம் பாடசாலை முன்*
*ஒழுங்கை.*

தகவல்:
நா.விக்னேஸ்வரன(மகன்)

### சந்திரன் சிறிதரன்

போயிட்டி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரன் சிறிதரன் நேற்று (29.05.2003) வியாழக்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் சந்திரன் - சந்திராதேவி தம்பதிகளின் அருமை மகனும், தர்மசீலன், லோகேஸ்வரி, மாலா, வசந்தினி, காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் செந்தூரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நகுலேஸ்வரன், சுதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*போயிட்டி,*
*நீர்வேலி (ஊரெழு)*

தகவல்:
வைரவன் சந்திரன்
(தந்தை)

(18576)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.